16 MAY 1956

கிராம நலம்

(மாதப் பத்திரிகை)

சென்னை அரசாங்க சமுதாய அபிவிருத்தி
இலாகா வெளியீடு

மாடி—1 | மே, 1956 | படி—8

வேள்வியும், வேட்கையும்

"ஜனங்களின் பொதுநலத்துக்கான எல்லா வேலைகளையும் 'வேள்வி' (அதாவது, 'யக்ஞம்') என்று கொள்ளவேண்டும் என்பது, மகாத்மா காந்தியடிகளின் கருத்து. எனவே, மக்கள் பொதுநலப்பணி செய்யும்போது, வேள்வியில் ஈடுபடுவோர்க்கு இருக்கவேண்டிய எல்லா குணநலன்களையும் பெற்றுத் திகழவேண்டியது அவசியம். அரசாங்கமும், பொதுமக்களும் இதை மறவாமல், ஒன்று கலந்த உள்ளன்போடு, தொண்டாற்றப் பிரார்த்திக்கிறேன்."

—ராஷ்டிரபதி ராஜன்பாபு

"நம் ஆட்சி அமைப்பு, 'தீன நாதன்' ஆகவேண்டும். எளியவர்களுக்கு உதவுவதாகவேண்டும்."

—விநோபாஜி



பூமிதான - - இயக்கத்தின் - முன்னேற்றம்

18–3–1956-ம் ஸ்ரீ தேதியில் சென்னை நகர பூதான ஊழியர் மகாநாட்டில் சென்னை ராஜ்ய முதல் அமைச்சர், ஸ்ரீ காமராஜ் பேசியதின் சாரம்

" வினோபாஜி சென்னைக்கு வர இன்னும் கொஞ்சகாலம் தான் இருக்கின்றது. நல்ல முறையில் நாம் அவருக்கு வரவேற்பு கொடுக்கவேண்டும். எல்லோரும் வரவேற்புக் கொடுப்பார்கள். அதில் சந்தேகமில்லை. ஆனால் அது வெறும் ஆரவாரமாக மாறிவிடாமல் பார்த்துக் கொள்வது நம் பொறுப்பு. இப்பொழுது ஏற்படும் உற்சாகத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

பூமிதான இயக்கம் நிலமுள்ளோரிடமிருந்து நிலத்தை வாங்கி நிலமில்லாதவர்களுக்கு கொடுப்பதை மட்டும் லட்சியமாகக் கொண்டதல்ல. சொத்தின்மேல் உள்ள ஆசையை விட்டொழிக்க வேண்டும். தனியுடைமையே கூடாது என்பதுதான் பூமிதான இயக்கத்தின் லட்சியம். பலருக்குக் கிடைக்காத ஒரு பொருளை, தனிப்பட்ட மனிதன் ஒருவன் வைத்திருந்தானானால், அப்போதுதான் கஷ்டம் உண்டாகிறது. சொத்துடைமையை நீக்குவதற்கு பல வழிகள் உண்டு.

வினோபாஜி இதை அஹிம்சா முறையில் சாதித்து வருகிறார். அஹிம்சா முறையில் காரியத்தைச் சாதிக்க முடியும் என்பதை உலகத்திற்கு காந்திஜி ஏற்கனவே எடுத்துக் காட்டிவிட்டார். பலருக்குக் கிடைக்காதபோது தனியொருவன் நிலமும் பணமும் வைத்திருப்பது நியாயமல்ல என்பதை நிலமும் பணமும் வைத்திருப்பவர்களே ஒத்துக் கொள்வார்கள். இதில் எல்லோரும் சேர்ந்து உழைக்கலாம். அரசியல் கட்சிகள் செய்வதுபோல கூட்டணி சேர வேண்டிய அவசியம் இல்லை. ஒரே கட்சியிலிருப்பவர்களில் கூட சிலர் இதில் சேர்ந்து உழைக்கலாம். சிலருக்கு இது பிடிக்காமல் இருக்கலாம். அரசியல் காரியங்கள்போல் இதை நினைக்கவேண்டாம். அமைதியான முறையில் எழுச்சியை உண்டாக்க வேண்டும். அதை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வெண்டும்.

வினோபாஜி சென்னைக்கு வருகிறார். அகில இந்திய 8-வது சர்வோதய சம்மேளனம் காஞ்சீபுரத்தில் நடைபெற இருக்கிறது. ஆகவே, நமக்கு அதிக பொறுப்பு இருக்கிறது.

1956-ம் ஸ்ரீ மார்ச்சுமீ 31உ வரை

கிடைத்த கிராம தானங்கள்

அஸ்ஸாம் **11**, உத்கல் **971**, குஜராத் **2**, பீஹார் **27**, மத்தியபாரத் **1**, ஹைதராபாத் **4**, உத்தரப் பிரதேசம் **8**, கேரளம் **1**, தமிழ்நாடு **4**, வங்காளம் **2**, ராஜஸ்தான் **3**— ஆக மொத்தம் **1,037**.

சம்பத்து தானம்

10,433 பேரிடமிருந்து ஆண்டொன்றுக்கு ரூபாய் **4,30,249-10-3** சம்பத்து தானமாகக் கிடைத்துள்ளது.

ராஜ்யம்.	கிடைத்த நில தானம் ஏக்கர்.	நிலமளித்தவர்கள் எண்ணிக்கை.	விநியோகித்த நிலம்.	நிலம் பெற்ற குடும்பங்கள் எண்ணிக்கை.
ஆந்திரா	50,754	..	..	..
உத்தரப் பிரதேசம் ..	576,728	24,709	114,174	34,318
உத்கல் (ஒரிஸ்ஸா) ..	285,029	92,715	41,378	12,640
கர்நாடகம்	3,729	768	559	204
கேரளம்	28,465	4,364	1,426	448
குஜராத்	44,252	..	10,886	3,477
தமிழ்நாடு	47,092	12,998	4,582	1,748
டெல்லி	9,388	222	157	94
பஞ்சாப்-பெப்சு ..	15,497	3,563	1,010	248
பம்பாய்	578	10	..	..
பீஹார்	2,441,684	2,99,390	85,690	..
வங்காளம்	11,580	6,550	1,963	1,612
மத்தியப் பிரதேசம் ..	135,265	31,045	41,907	7,881
மத்தியப் பாரத் ..	47,505	5,939	678	173
மகாராஷ்டிரம் ..	30,846	7,235	3,983	1,072
மைசூர்	9,065	..	100	15
ராஜஸ்தான்	374,667	5,760	18,049	2,946
விந்தியப் பிரதேசம் ..	8,370	1,668	927	350
சௌராஷ்டிரம் ..	30,819	..	5,818	..
ஹிமாசலப் பிரதேசம் ..	1,564	112	21	8
ஹைதராபாத்	152,664	8,437	37,044	7,610
ஆக மொத்தம் ..	4,305,544	505,485	370,355	7,484

நாம் எல்லோரும் பூமிதான இயக்கத்தில் பங்குகொண்டு நமக்கேற்பட்ட கடமையை ஆற்ற வேண்டும்.

சென்னை நகரத்தில் டிவிஷன்களாகப் பிரிந்து வீடு வீடாகச் சென்று இயக்கத்தைப்பற்றிப் பிரசாரம் செய்யவேண்டும். வினோபாவைப்பற்றியும், அவருடைய இயக்கத்தைப் பற்றியும் எடுத்துச் சொல்லவேண்டும். பூமிதானம், சம்பத்து தானம் முதலிய தானங்களைச் சேர்க்கவேண்டும். கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. கொடுப்பவர்களைவிட கொடுக்காதவர்களிடம் அதிக நேரம் பேசிவிட்டு பெரிய நமஸ்காரம் போட்டுவிட்டு வரலாம்.

வீடு வீடாகச் சென்று இயக்கத்தின் செய்தியைப்பற்றிச் சொல்லுவதில் பெருத்த நன்மை இருக்கிறது. பத்திரிகை படிக்கவும், ரேடியோவில் கேட்கவும், பிரசங்கங்கள் கேட்கவும் வசதி படைத்தவர்கள் நம் நாட்டில் வெகு சிலரே. ஒன்றுமே தெரியாத பாமர மக்கள்தான் நாட்டில் அதிகம். நியாயமான விஷயங்களை சீக்கிரம் புரிந்துகொள்ளும் சக்தி படைத்தவர்கள் அந்தப் பாமர மக்கள். அவர்களிடம் இச்செய்தி எட்டவேண்டும். எட்டிவிட்டால் இயக்கம் வெற்றியடைந்துவிடும். பாமர மக்களும் காந்திஜியின் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபாடுகொள்ள ஆரம்பித்தவுடன்தான், வெள்ளையர்கள் நமது நாட்டைவிட்டுச் சென்றனர். அதுபோல எல்லோருக்கும் இந்த இயக்கம் நல்ல இயக்கம் என்று பட்டுவிட்டால், நிலத்தையும், பணத்தையும் தன்னிடமே யாரும் வைத்துக் கொண்டிருக்கவேமாட்டார்கள். அவ்வாறு வைத்துக்கொள்வதற்கு வெட்கப்படுவார்கள்."

—" சர்வோதயம்."

நிதி அமைச்சர் ஸ்ரீ சி. சுப்ரமணியம் விடுத்துள்ள செய்தி

"ஆதாரக்கல்வி ஆராய்ச்சி மாநாடு இவ்வாண்டு காஞ்சீபுரத்தில் நடைபெறப் போகின்றது. இம்மாநாட்டுக்கு, நம்முடைய ராஷ்டிரபதி ராஜன்பாபு அவர்கள் விஜயம் செய்வார்கள். வினோபாஜி அவர்கள் சரித்திரப் பிரசித்தி பெறும் இம்மாநாட்டைத் துவக்கிவைப்பார்கள்.

கல்வித்துறையில் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று பேசாதவர்கள் இல்லை. பன்னெடுங்காலமாக, இது சம்பந்தமாக எத்தனையோ கருத்துக்கள் நிலவி வந்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை, ஒன்றுக்கொன்று மாறுபட்டும் வளர்ந்துள்ளன. ஆகவே, கல்விச் சீர்திருத்தம் என்பது நம் நாட்டின் மிக் முக்கிய பிரச்னைகளில் ஒன்றாக அமைந்துவிட்டது.

சமீபத்தில் வெளியான அரசாங்க அறிக்கை பொதுஜன ஆராய்ச்சியில் இருந்து வருகிறது. கல்வி நிபுணர்கள், பள்ளிக்கூட நிர்வாகிகள், ஆசிரியர்கள் முதலிய பல்வேறு சாரார் இதைத் தீவிரமாக ஆராய்ந்து தீர்க்க திருஷ்டியோடு நல்ல முடிவுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

கல்விக்கும், வாழ்க்கை நெறிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டும் என்பதில் ஒருவருக்கும் அபிப்பிராய பேதம் இருக்கமுடியாது. சிறுவயது முதல், உழைப்பின் உயர்வை அனுபவ பூர்வமாக அறிந்து, வாழ்க்கையோடு ஒட்டிய படிப்பைக் கற்றுத் தேர்ச்சிபெற, மகாத்மா காந்தியடிகள் உருவாக்கிய திட்டம், "ஆதாரக் கல்வி முறை". கிராமங்கள் நிரம்பிய பாரத நாட்டின் எதிர் கால நல் வாழ்வுக்கு, ஆதாரக்கல்வி முறைதான் அஸ்திவாரமாக அமையவேண்டுமென்பது அவருடைய ஆராய்ச்சியின் முடிவு. அந்த முடிவைத் தன் வாழ்நாளிலேயே நனவாக்க பல ஸ்தாபனங்களை அவர் அமைத்தார். இந்தியாவெங்கும் இந்தப் புதிய சித்தாந்தத்தை நடைமுறையில் செய்துகாட்ட பள்ளிக்கூடங்களையும் பயிற்சி நிலையங்களையும் நிறுவ உதவினர்.

அவர் தொடங்கிய இப் பெரிய புனர் நிர்மாண வேலையை நாம் தொடர்ந்து நடத்துவது அவசியம். கிராமங்களில் வாழும் எண்ணற்ற மக்களுக்கு கல்வி வசதி செய்துதரக் கடமைப்பட்டிருக்கிறோம். வாழ்க்கைக்குப் பயனுள்ள கல்வியை—வாழ்க்கையோடு தொடர்பு கொண்ட கல்வியை—எல்லோருக்கும் அளிப்பதற்கான வழி முறைகளை, காஞ்சி மாநாடு விளக்கிக் கூறும் என்று எதிர்பார்க்கிறோம். அகில இந்தியாவிலிருந்தும் வரும் அனுபவ அறிஞர்கள் இதற்குத்தக்க ஆலோசனை கூறுவார்கள் என்று நம்புகிறோம்.

வினோபாஜியின் தமிழ் நாட்டு விஜயத்தால் கல்வித் துறையில், புதிய நிர்மாண வேலை தொடங்கும் என்பதில் எனக்குத் திடமான நம்பிக்கையுண்டு. கிராமங்களிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கு, பொதுப் பண்ணைகள் தேவை. அதற்கான நிலத்தை கிராமவாசிகள் தானமாக வழங்க வேண்டுமென்று சில மாதங்களுக்கு முன் நான் விடுத்த வேண்டுகோள் ஓரளவு பலனளித்துள்ளது. சில நூற்றுக் கணக்கான கிராமங்களில் புதிய பள்ளிக்கூடங்கள் அமைக்கவும், அங்கே படிக்கும் மாணக்கருக்குப் பயன்படும் வகையில் பொது விவசாயப் பண்ணை அமைக்கவும் பலர் தானம் வழங்கியுள்ளனர். அவர்கள் எல்லோரையும் நான் பாராட்டுகிறேன். அவர்கள் காட்டிய வழியை மற்ற கிராமத்தாரும் பின்பற்றுவதற்கு வினோபாஜியின் விஜயம் சிறந்த சந்தர்ப்பம் அளிக்கின்றது.

காந்திஜியின் நிர்மாணத்திட்டங்களை நிறைவேற்றுவதே தேசத்துக்கும், விநோபாஜிக்கும் நாம் கொடுக்கும் சிறந்த காணிக்கையாகும்."

விவசாய அமைச்சர் ஸ்ரீ. பக்தவத்ஸலம் விடுத்துள்ள செய்தி

"மகான்களை மதித்து மரியாதை செலுத்திப் பலனடைவதில், முன்னணியில் நிற்பது, சென்னை ராஜ்யம். பழங்காலம் முதற்கொண்டு இத் துறையில் நாம் தலைமை வகித்து வருகிறோம்.

விவேகானந்தரை உலக மக்களுக்கு அறிமுகப்படுத்திய பெருமை, சென்னைக்கு உண்டு. 'சிகாகோவில்' நடைபெற்ற அகில உலக சமய மாநாட்டுக்கு அவரை அனுப்ப ஏற்பாடு செய்தவர்கள் சென்னைவாசிகளே.

மகாத்மா காந்தியடிகளின் நிர்மாணத் திட்டத்தைச் சிறந்த முறையில் வரவேற்று, வெற்றி பெற நிறைவேற்றிய வாய்ப்பு, சென்னை ராஜ்யத்துக்குக் கிடைத்தது. மதுவிலக்குத் திட்டம், ஹரிஜன ஆலயப்பிரவேசம், கிராம அபிவிருத்தி முதலிய சாத்வீகப் புரட்சி இயக்கங்கள் இங்கேதான் முதன் முதலாகத் தொடங்கப்பட்டன.

மகாத்மா காந்தியடிகளின் சீடர் விநோபாஜி முதன் முறையாக நம் சென்னை ராஜ்யத்துக்கு விஜயம் செய்கிறார். மே மாதம் 12-ந் தேதி திருவள்ளூர் தாலூகாவில் தமிழ நாட்டு பூதான யாத்திரையைத் தொடங்குகிறார். விநோபா அடிகளார், முதன் முதலாக அடியெடுத்து வைக்கும் பாக்கியம், 'பட்டரை பெரும்பூதூர்' என்ற ஊருக்குக் கிடைக்கிறது. திருவள்ளூர் தாலூகா மக்கள் இந்த வகையில் எப்போதும் அதிருஷ்டசாலிகள் என்று கூறுவேன். அவர்கள் சென்ற ஆண்டு காங்கிரஸ் அக்கிராசனர் ஸ்ரீ. தேபர் அவர்களை முதன் முதலாக வரவேற்றனர். இவ் வருஷம், தமிழ் நாட்டின் தலைவாசலில், விநோபாஜியை வரவேற்கின்றனர்.

அடிகளாரின் பூமிதான யாத்திரை, நவ பாரத நிர்மாணத்துக்கு உயிரூட்டும் பெரிய சேவையாகும். நாட்டின் பிதா நமக்கு வாங்கித் தந்துள்ள சுதந்தரத்தின் பயனாக, ஏழை எளியவர் வாழ்வில் சுபிட்சம் தழைக்க வேண்டும். அரசாங்கம் மட்டும் இதைச் சாதித்துவிட முடியாது. மக்கள் மனப்பான்மையில் சிறந்த மறுமலர்ச்சி ஏற்பட்டு, நிர்மாண வேலைகளில் புதிய வேகம் இளம்ப வேண்டும். பூமிதானம், சிரமதானம், சம்பத்துதானம் முதலியவை, மக்கள் சமுதாயத்தில் சாத்வீகப் புரட்சி ஏற்படுவதற்கான சாதனங்களாக அமைகின்றன. அடிகளாரின் பூமிதான இயக்கம், மகாத்மாஜியின் வழி வந்துள்ள சாத்வீக நிர்மாணத்திட்டம்; ஜீவ சக்தி நிறைந்த மாபெரும் மக்கள் இயக்கம்.

அடிகளாரின் சென்னை விஜயம், இந்த இயக்கத்துக்கு ஒரு புதிய உற்சாகம் அளிக்கும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. ஸ்ரீ ஜகந்நாதன் தலைமையில், ஏற்கெனவே நம் ராஜ்யத்தில் பல சேவையாளர்கள் இத்துறையில் சிறந்த சேவை செய்து வருகின்றனர். எல்லா ஜில்லாக்களிலும் எண்ணற்ற மக்கள் பல வகையிலும் பூமி தான இயக்கத்துக்கு ஆதரவளித்து வருகின்றனர். எல்லா வேற்றுமைகளையும் மறந்து இந்த ஆக்கத் துறையில் ஒற்றுமையோடு பணி புரிந்து, நம் ராஜ்யத்தின் புகழை மேம்படுத்த வேண்டும் என்று எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்."

❁ ❁ ❁

ஆக்கூரில் அபிவிருத்தி வேலைகள்

புலவர் கு. நடராசன், கீழைக்கலை உயர்நிலைப்பள்ளி, ஆக்கூர்.

"சிட்டுக்குருவி, சிட்டுக்குருவி சேதிதெரியுமா" என்ற இசை.

சித்தம் மகிழ்வீர் சித்தம் மகிழ்வீர் செல்வச் [சிறுவர்களே
புத்தம் புதிதாய் மலர் மணக்கும் பூந்தமிழ்ச் சோலை
கத்தும் குயிலின் இசையனைத்தும் காதில் கேட்குது
காணும் காட்சியாவும் மனதைமிகவும் குளிர [வைக்குது.

சிறுவர் விளையாட இங்கு குழந்தைகள் பூங்கா
சேவைசெய்யும் அறிஞர்களின் மகிழ்ச்சியோதாங்கா
அறிவுபெற கல்விகூடம் அமைத்திடவேண்டும்
ஆணும் பெண்ணும் ஒன்றாய்க்கூடி படித்திட [வேண்டும்.

மருத்துவம் செய் நிலையம் ஒன்று கட்ட போறாங்க
மாவட்டத்து தலைவர் எல்லாம் துணைபுரிவாங்க
திருத்தமுற நமது ஊரை ஆக்கிடவேண்டும்.
திருமகளின் உறைவிடமாய் நிகழ்ந்திடவேண்டும்.

தேசிய வளர்திட்ட மொன்று வந்திருக்குது
தேசநன்மை கருதி மிகவும் வேலைசெய்யுது
பேசுகின்ற பெருமையெல்லாம் அதனையேசாறும்
பேசபேச நாவினிக்க தேனுமே ஊறும்.

இதுமட்டுமா இன்னும் பலவும் செய்யபோறாங்க
எழில் நிறைந்த ஆக்கூரின் செல்வச்சிறுவரே
பொதுநலத்து ஊழியரின் முயற்சியைக்காண
பொறுத்திருப்பீர், பொறுத்திருப்பீர் செல்வச் [சிறுவர்களே

சித்தம் மகிழ்வீர், சித்தம் மகிழ்வீர் செல்வச் [சிறுவர்களே.

கடிதப் பேச்சு

ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி, கூட்டு அபிவிருத்திக் கமிஷனர்.

[லட்சிய வேட்கையும், அனுபவ அறிவுரைகளும் பொதிந்துள்ள இக்கடிதம், கிராம நலத்துறையில் சேவை செய்வோர் அனைவருக்கும் சிறந்த விருந்தாக அமையும் என்று நம்புகிறோம். மாதந் தோறும் இத்தகைய கடிதங்கள் தொடர்ந்து வெளிவரும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்]

அன்புள்ள சக ஊழியர்களுக்கு,

கிராம சேவையில் ஈடுபட்டுள்ள உங்களுடன் "கிராம நலம்" வாயிலாக மாதம் ஒருமுறையேனும் பேசவேண்டுமென்பது என்னுடைய விருப்பம். நீங்கள் அனைவரும் மேற்கொண்டுள்ள கிராமத் திருப்பணியில் இடையறாத ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் இருக்கவேண்டுமெனில், உங்களுடைய வேலையின் முக்கியத்தையும், பெருமையையும் நீங்கள் அறிந்துகொள்வது அவசியம்.

தேசம் சுயராஜ்யம் பெற்றதிலிருந்து, இந்த தேசம் மேலான நிலைமைக்கு வருவதற்கான பல வேலைகளை, இந்திய சர்க்காரும், ராஜ்ய சர்க்கார்களும் ஏற்று நடத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள். நடைபெற்றுவரும் பல வகையான நிர்மாண வேலைகளுள், நாம் ஏற்றுக்கொண்டுள்ள சமூக அபிவிருத்தி வேலைகள், எல்லாவற்றையும்விட மிகவும் முக்கியமானவை என்று நம்முடைய பிரதம மந்திரி அவர்களும், மற்றத் தலைவர்களும் எடுத்துச் சொல்லி வருவதை, நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இந்தியா என்றால் கிராமங்கள்தான். கிராமங்களுடைய பொருளாதார, சமூகநிலை மேம்பட்டாலன்றி, இந்தியா உயர்வதற்கில்லை. நாம் மேற்கொண்டுள்ள சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கமெல்லாம், இந்திய நாட்டுக் கிராம வாழ்வில் ஒரு புது சகாப்தம் உதயமாவதைக் காணவேண்டுமென்பதேயாகும்.

முழுநேரத் தேசத் தொண்டாற்றும் அதிருஷ்டம்

புதியதாக நிர்மாணமாகிவரும் நவபாரதத்தைச் சிருஷ்டிக்கும் சிறந்த ஆக்கவேலையில் ஈடுபட்டிருக்கிறோம் என்ற நினைவு, உங்களிடம் எப்போதும் இருந்து வரட்டும். மகாத்மா காந்தி எதற்காக சுயராஜ்யம் வேண்டுமென்று விரும்பினாரோ, எம்மாதிரியான புதிய இந்தியாவைக் காணவேண்டுமென்று ஆசைப்பட்டாரோ, அந்த வேலையை நிறைவேற்றுவதுதான் நம்முடைய கடமையாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நம்முடைய தலைவர்களும், மற்றவர்களும் நம்முடைய தேசம் சோஷியலிஸ பாணியில் நல்லதொரு சமுதாயமாக அமைய வேண்டுமென்று விரும்புகிறார்கள். அந்த விருப்பத்தை காரியத்தில் நிறைவேற்றி வைக்கும் வேலைதான், நாம் மேற்கொண்டுள்ள வேலை. எனவே, நம்முடைய முழுநேர அலுவலாக ஏற்றுக் கொண்டுள்ள சமுதாய அபிவிருத்தித் திட்ட வேலை, மற்ற எல்லா வேலைகளையும்விட ஸ்திரமானது ; இந்த தேசத்தின் எதிர்கால சரித்திரத்தை உருவாக்குவது என்ற நினைவு நம் மனதை விட்டு அகலாதிருக்கட்டும். நமக்குக் கிடைக்கும் ஊதியமோ, மற்றவைகளோ பெரிதாக இல்லாவிட்டாலும் நம்முடைய வேலையின் தன்மை மிகப் பெரியது ; மகத்தானது. இந்த மகத்தான பெரிய வேலையை நல்ல முறையில் நிறைவேற்றி வைப்பதற்கு உரிய கருவிகளாக நம்மை நாம் ஆக்கிக் கொள்வோமாக. உங்கள் அனைவருக்கும் இது சம்பந்தமான பயிற்சி ஓரளவு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆன போதிலும், கிராம சேவைக்குத் தகுதியுள்ளவர்களாக நம்மை ஆக்கிக் கொள்வதற்கு இன்னும் என்னென்ன தெரிந்து கொள்ளவேண்டுமோ, எதையெதை பயின்று கொள்ளவேண்டுமோ அவற்றை எல்லாம் தெரிந்து கிராம நிர்மாண வேலைகளுக்கு வேண்டிய எல்லா அம்சங்களும் நம்மிடையே வளர்வதற்கு, புதிய முறையில் நாம் நடந்து கொள்வோமாக.

மற்றவர்கண் காணிப்பு ஏன் ?

சோஷியலிஸ பாணியில் புதிய இந்தியாவைத் தோற்றுவிக்கும் தொண்டர்களாகவுள்ள நம்முடைய லட்சியம், உயர்ந்ததாக இருக்கட்டும் ! நம்முடைய எண்ணங்களும் மேலானவைகளாக இருக்கட்டும் ! நாம் செய்யும் தினசரி வேலைகளை மற்றவர்கள் வந்து கண்காணிக்க வேண்டுமென்ற அவசியமில்லாமல் நடந்து கொள்வோமாக. நாம் எடுத்துக் கொண்டுள்ள வேலை, நாம் பிறந்த பொன்னாட்டைச் சீரிய முறையில் உருவாக்கும் சிறந்த நற்பணி. நமக்கு மேலேயுள்ள அதிகாரிகளைத் திருப்தி செய்து, அதன்மூலம் நம்முடைய வருவாயைக் கொஞ்சம் அதிகமாக்கிக் கொள்ளும் சாதாரண சர்க்கார் வேலைகளில் இதுவும் ஒன்றல்ல என்பது, நமக்கு எப்போதும் ஞாபகத்தில் இருக்கட்டும்.

புது வகையான தேசபக்தி

நாம் பிறந்த தேசத்தை, பொருளும், வளமும் செறிந்த தாகவும், சாந்தியும், சமாதானமும் நிறைந்ததாகவு முள்ள ஒரு புதிய சமுதாயமாகச் செய்து, மற்ற நாட்டினரும் நம்மைப் பார்த்து பின்பற்றும்படியான ஒரு சிறந்த சமூக அமைப்பை நிர்மாணம் செய்யும் வேலையில் ஈடுபட்டிருக் கிறோம். "என்னுடைய இந்த வேலைகளின் மூலம், நாம் பிறந்த நாட்டை எல்லாத் துறைகளிலும் உயரச் செய் வேன்" என்ற கடமையுணர்ச்சி, நமக்கு என்றும் வழிகாட் டியாக விளங்கவேண்டும். நாம் செய்ய விரும்பும் வேலை களுக்கு ஆண்டவனுடைய அருளும், பொதுமக்களின் நல்லாதரவும் நமக்கு நிச்சயம் உண்டு.

"குடிசெய்வ லென்று பொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும்"

என்பது என்றும் பொய்யா மொழியே.

திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956, பிப்ரவரி மாதத்தில், வடுவூரிலுள்ள ஏரி ஆழமாக்கப்பட்டது. அலிவலம் கிராம மகப்பேறு நிலையத்துக்கு சுமார் 497 ரூபாய் பெறுமான மருந்துகளும் சாதனங்களும் விநியோகிக்கப்பட்டன. 55 சேரிகள் துப்புரவு செய்யப்பட்டன. 79 மணங்கு பொறுக்கு விதைகள், 3 மணங்கு உரம், 62 விவசாயக் கருவிகள் ஆகியவை விநியோகிக்கப்பட்டன. 6·97 ஏக்கர் நிலம் பண்படுத்தப்பட்டது. 17·55 ஏக்கர் நிலத்தில் காய் கறித் தோட்டம் சாகுபடி ஆரம்பிக்கப்பட்டது. 30,058 ஏக்கர் பரப்பில், பசுந்தாளுரச்செடிகள் நடப்பட்டன. மேலும், 397 கனிதரும் மரக்கன்றுகளும் 10,367 இதர மரக்கன்றுகளும் நடப்பட்டன. 190 நோயுற்ற கால் நடை பிராணிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. தொண்டை அடைப்பான் நோய் பரவுவதைத் தடுக்க, 216 கால் நடை பிராணிகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. கொத்தமங்கலம் பஞ்சாயத்து பள்ளிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. மற்றும், ஒரு ஆரம்ப பாடசாலைக்காக, கட்டிடமொன்று கட்டிமுடிக்கப்பட்டது. பாமினியில் ரேடியோ மண்டபம் கட்டிமுடிக்கப்பட்டது. திருவிடமருதூர் கிராமத்தில், ஓராசிரியர் பள்ளி திறக்கப்பட்டது. இரு வார்தா செக்குகள், இவ்வட்டாரத்தில், நிர்மாணிக்கப்பட் பட்டன. தலைஞாயிறு கிராமத்தில், கிளை நூல்நிலைய மொன்று திறக்கப்பட்டது.

சென்னை அரசாங்க கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் ஸ்ரீ கொ. வேங்கடாசலபதி அவர்களால், ஆவரைகுளத்தில், சமுதாய நிலையம் உருவாவதற்கு, 22-2-56-ல் அடிப்படைக் கல் நாட்டப்பட்டது.

சென்னை ராஜ்யத்தில் இந்தோனேசிய மாதர்கள்

டாக்டர் ஸ்ரீமதி சவுந்தரம் ராமசந்திரன், காந்தி கிராமம்.

இந்தோனேசியாவிலிருந்து, 10 மாதர்களடங்கிய சுற்றுப் பிரயாண கோஷ்டி ஒன்று இந்தியாவுக்கு சமீபத்தில், விஜயம் செய்தது. அக் கோஷ்டியினரில் எழு பேர், அரசாங்க அதிகாரிகள். அவர்களில் மூன்றுபேர் வெகுஜன கல்வி பரப்பு இலாகாவில் ஊழியம் புரிபவர்கள். ஒருவர் சமூகசேவை அமைச்சர் காரியாலயத்தில் உத்தியோகம் பார்ப்பவர். மற்றொருவர் சுகாதார அமைச்சர் காரியாலயத்தில் பதவி வகிப்பவர். மற்றுமிருவர், விவசாய அமைச்சர் காரியாலயத்திலும், கூட்டுறவு அமைச்சர் காரியாலயத்திலும் சேவை செய்பவர்கள். உத்தியோகச் சார்பற்ற ஸ்தாபனங்களைச் சேர்ந்த மூன்று மாதர்களும், அக்கோஷ்டியிலிருந்தனர்.

சென்னைக்கு அக்கோஷ்டியினர் விஜயம் செய்தபோது, விவசாய அமைச்சர் ஸ்ரீ பக்தவத்ஸலம், ஹரிஜனநல அமைச்சர் ஸ்ரீ பரமேஸ்வரன், ராஜ்ய சமூகநல போர்டு தலைவி டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி, சென்னை அரசாங்க பிரதம காரியதரிசி ஸ்ரீ W. R. S. சத்தியநாதன் முதலியோர் அவர்களை வரவேற்று, உபசரித்தனர்.

அக்கோஷ்டியினர், 1956-ம் ஆண்டு மார்ச் மீ 21-ந் தேதியன்று, தமிழகத்திலுள்ள காந்தி கிராமத்துக்கு விஜயம் செய்தனர். காந்தி கிராம டைரக்டர் ஸ்ரீ G. ராமச்சந்திரன், அவர்களை வரவேற்று, காந்திகிராம ஸ்தாபனத்தில் நடைபெற்றுவரும் வேலைகளை விவரித்துக்கூறினார். ஸ்ரீ S. வேங்கடசாமி, P.R.O. அவர்களுடன் வந்திருந்தார்.

இந்தோனேசிய மாதர்கள் காந்தி கிராமத்தில் நடைபெற்றுவரும் வேலைகளை நேரில் பார்த்தறிந்தார்கள். அங்கு பயின்றுவரும் மாணவர்களுடன் விவாதித்து, பல விஷயங்களை அறிந்துகொண்டு, அவர்களுடைய நாட்டில் நடைபெற்றுவரும் வேலைகளைப் பற்றியும் விளக்கிக் கூறினார்கள். பிரார்த்தனை நடைபெற்றபோது, உலகிலுள்ள பெரிய மதங்கள் அளிக்கும் போதனை மொழிகள் வாசிக்கப்பட்டன. அப்பிரார்த்தனைகளில், அவர்கள் கலந்து கொண்டார்கள். பிறகு, அவர்கள் சில கிராமங்களுக்குச் சென்று, சமுதாய நலத் திட்டம் அங்கெல்லாம் எவ்வாறு நிறைவேறி வருகிறது என்பதை நேரில் கண்டறிந்தார்கள். கிராம மாதர்கள் கூட்டங்களில் அக்கோஷ்டியினர் கலந்து கொண்டார்கள். சிறுவர்கள் நடத்திய கலாச்சார நிகழ்ச்சிகளைப் பார்த்து மனமகிழ்ந்தார்கள். விவசாய இளைஞர் மன்ற நிகழ்ச்சிகளிலும் அவர்கள் கலந்துகொண்டார்கள்.

காந்தி கிராமத்திலிருந்து அக்கோஷ்டியினர் மதுரைக்குப் புறப்பட்டார்கள். மதுரையில், மீனாக்ஷி கோயில், திருமலை நாயக்கர் மஹால் மற்றும் இதர இடங்களுக்கு விஜயம்செய்து,

சென்னைக்குச் சமீபத்தில் விஜயம் செய்த இந்தோனேசிய மாதர்களை, விவசாய அமைச்சர் ஸ்ரீ பக்தவத்சலம் வரவேற்றார்.

காந்தி கிராமத்தில் இந்தோனேசிய மாதர்கள்.

புராதன பண்பாட்டையும், கலைச் செல்வங்களையும் கண்டுகளித்தனர். மதுரையிலுள்ள அகில இந்திய மாதர் சங்கக் கிளை ஸ்தாபனத்தார் அக்கோஷ்டியினரை வரவேற்று உபசரித்தார்கள். அங்குள்ள மாதர் சங்க அங்கத்தினர்களும், ஜில்லா சமூக சேவை போர்டு தலைவியும், மீனாக்ஷி சேவா சங்க அங்கத்தினர்களும், ஹிந்து மாதர் சங்கம், காந்தி சேவா சங்கம் முதலிய ஸ்தாபனங்களைச் சேர்ந்த அங்கத்தினர்களும் வரவேற்பு வைபவத்தில் கலந்து கொண்டனர்.

அக்கோஷ்டியினரிடமிருந்து, அவர்களுடைய நாட்டைப் பற்றிப் பலவிஷயங்கள் தெரிந்துகொண்டோம். இரண்டாவது உலகப் போர் நிகழ்ந்தபோதும், ஜப்பான் படையெடுப்பின்போதும் டச்சுக்காரர்கள் இந்தோனேசியாவைத் திருப்பிப்பெற முயற்சித்தபோதும், இந்தோனேசியாவிலுள்ள ஆண்கள் அனைவரும், நாட்டைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டதால், நாட்டில் அபிவிருத்தி வேலைகளை நடத்தும் பொறுப்பை இந்தோனேசிய மாதர்களிடம் ஒப்படைத்துவிட்டனர். அந் நாட்டில், ஆறு மாதர்கள் போலீஸ் இன்ஸ்பெக்டர்களாக சேவை செய்துவருகிறார்கள். பார்லிமெண்டில் 16 மாதர்கள் அங்கம் வகிக்கிறார்கள். முன்பு சேவைசெய்த அமைச்சரவைகளில், இரு மாதர்கள் அங்கம் வகித்திருக்கிறார்கள். மாதர் அரசியல் கட்சிகளும் அந் நாட்டில் உண்டு. கணவர்கள் பின்பற்றும் அரசியல் கொள்கைகளையும் கோட்பாடுகளையுமே, மனைவிகளும் பின்பற்றுவது தான், பெருவாரியான வழக்கம். 800 லட்சம் ஜனத்தொகையுள்ள இந்தோனேசியாவில், 130 லட்சம் பேர், மாதர் ஸ்தாபனங்களின் அங்கம் வகிக்கிறார்கள். போலீஸ்காரர்களின் மனைவிகளுக் கென்று தனிச் சங்கம் ஒன்று உண்டு. அதேமாதிரி, பள்ளி ஆசிரியர் மனைவிகள் சங்கம், வியாபாரிகளின் மனைவிகள் சங்கம் முதலியவையும், இந்தோனேசியாவில் உண்டு.

பாண்டுங்கிலிருந்து (இப்பெயரைக் கேட்பவர் மனது பூரிப்பது சகஜந்தானே. ஆசிய-ஆப்ரிக்கா நாடுகளின் மகத்தான ஒற்றுமையை உருவாக்க சரித்திரப் பிரசித்தி பெற்ற மகாநாடு கூடிய ஸ்தலமாகிய பாண்டுங்கை யாரால் மறக்கமுடியும்)—வந்த மிஸிஸ் ரோலினாவும் வினியாவும் ஆத்மத்ஜாவும், இந்தோனேசியாவில், கூட்டுறவு ஸ்தாபனங்களையும் பாங்குகளையும் மாதர்களே நடத்தி வருகிறார்களென்று கூறி, அந்த ஸ்தாபனங்களை மாதர்கள் எவ்வாறு நடத்துகிறார்கள் என்பதையும் விளக்கிக்கூறினார்கள்.

பொதுஜன கல்விபரப்பு இலாகாவைச் சேர்ந்த மிஸ். தம்புருன் மவுலானி, மிஸிஸ் சைத்தார்ட்ஜோ, ஹடீஸோ தீர்த்தோ, மிஸ். தாஹர்சமாத் முதலியோர் டச்சு ஆதிக்கத்தில் இந்தோனேசியா இருந்தபோது (அதாவது 350

ஆண்டு காலத்தில்) நடைபெற்றிராத அற்புத மாறுதல், இந்த வெகுஜன இலாகாவினால் உண்டாக்கப்பட்டிருக்கிற தென்றும், நாடு சுதந்திரம் பெற்று பத்து ஆண்டுகள் முடிவதற்குள், படித்தவர்களின் எண்ணிக்கை 10 சத விகி தத்திலிருந்து 60 சதவிகிதத்துக்கு உயர்ந்துவிட்டதென்றும் கூறினார்கள். படித்து அத்தாட்சிப் பத்திரம் பெற்றால்தான், தொழில் பயிற்சி நிலையங்களில் சேர அனுமதி கிடைக்கும்.

இந்தோனேசியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே தொன்று தொட்டு, கலாசாரத் தொடர்பு இருந்து வந் திருக்கிறது. இந்தோனேசிய மொழிகளில் சமஸ்கிருதம் தமிழ் முதலிய இந்திய மொழிகளின் வார்த்தைகள் காணப்படுகின்றன. "பாஸா" என்று அவர்கள் கூறு கிறார்கள் "பாஷை" என்று நாம் கூறுகிறோம்—மொழி யைக் குறிக்க. "வனிதா" எனகிறார்கள் அவர்கள், நாம் வனிதை என்கிறோம், பெண்ணைக் குறிப்பதற்கு. ஸ்தாபனத்தை "மண்டலி" என்கிறோம்; அவர்களும் அதே மாதிரிதான் கூறுகிறார்கள். "குளம்" என்பது தமிழிலும் இந்தோனேசிய மொழியிலும் குளத்தை யே குறிக்கிறது. முல்லையை "முல்லதி" என்கிறார்கள். அவர்களுடைய நடனங்கள், பெரும்பாலும், கதக்களி மணிப்புரி, நடன பாவங்களைப் பிரதிபலிக்கின்றன.

வெவ்வேறு நாடுகளில் உள்ள கிராமங்களைப் புன ருத்தாரணம் செய்வதற்கு மட்டுமின்றி, மனித பண் பைத் தூய்மைப்படுத்தி உலகில் சாசுவதமாக அமைதி நிலவுவதற்கும், இம்மாதிரியான சுற்றுப் பிரயாணங்கள் இன்றியமையாதவை. இரண்டாவது உலகப் போர் மூண்ட போது, டாக்டர் முத்து லக்ஷ்மி ரெட்டி "உலகி லுள்ள தாய்மார்களே! ஒன்று சேருங்கள். பீரங்கிக்கு உணவாகக்குழந்தைகளை உபயோகிக்கும் கொடிய நோக்கம் ஆண் மக்கள் மனதிலிருந்து அகலும்வரை, குழந்தை களைப் பெற்றெடுத்துப் பேணி வளர்க்காதீர்கள்" என்று உருக்கத்துடன் வேண்டுகோள் விடுத்ததை அவர்களுக்கு விளக்கினேன். அவர்கள் முழுமனதோடு அக்கருத்தை ஆதரித்தனர்.

நமது விவசாய அமைச்சர், அக்கோஷ்டியினரைச் சென்னையில் வரவேற்றபோது, "கிராம புனர் நிர்மா ணத்துக்குத் தேவைப்படும் கருத்துக்களை ஒருவருக் கொருவர் பரிமாறிக் கொள்வதற்கு, இம்மாதிரியான சுற்றுப் பிரயாணங்கள் மிகவும் பயன்படும்; கிராம அபி விருத்தி திட்டங்களை நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ள வெவ்வேறு நாடுகளில் வாழும் மக்கள் தங்கள் அனுபவங் களை பரிமாறிக் கொள்வதற்கும் பயன்படும்" என்றார்.

பெரம்பலூர் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, பிப்ரவரி மாதத்தில், 132 ரூபாய் பெறுமான கதர் விற்கப்பட்டது. 300 சர்க்காக்கள் விலைக்கு வாங்கப்பட்டது. 100 ஏக்கர் நிலத்தில், ஜப்பானிய நெல் சாகுபடி முறை பின்பற்றப்பட்டது. பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை ஒழிக்க, 250 பவுண்டு பூச்சி கொல்லி மருந்து விநியோகிக்கப்பட்டது. 10,000 சினியா புல் செடிக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. 118 கால்நடைப் பிராணிகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. 3 முதியோர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. தொண்டை மான் துறையில், சிறுவர் பூங்கா ஒன்று திறக்கப்பட்டது. ஆறு கிராமங்களில் துப்புரவு வேலைகள் நடைபெற்றன. குருடர்களுக்கு சிகிச்சை அளிக்க, இரு நிலையங்கள், இந்திய செஞ்சிலுவை சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டு, 122 பேர் களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. கிருஷ்ணபுரத்திலும் பூலாம்பாடியிலுமுள்ள குஷ்ட சிகிச்சை நிலையங்களில், 596 பேர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

புதுக்கோட்டை வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, பிப்ரவரி மாதத்தில், மொத்தம் 6 பர்லாங்கு நீளத்துக்கு, ரஸ்தா அமைக்கப் பட்டது. 579 மணங்கு உரம் விநியோகிக்கப்பட்டது. 49 பவுண்டு பயிர் பூச்சி கொல்லி மருந்து விற்கப்பட்டது. 200 பசுந்தாளுரச் செடிக்கன்றுகள் நடப்பட்டன. 32 நோயுற்ற பிராணிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, 304 பிராணிகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது. புல்லன் விடுதியிலும், குப்பகுடியிலும் பஞ்சாயத்துக்கள் அமைக்கப் பட்டன. 10 சர்க்காக்கள் விற்கப்பட்டன.

கரூர் வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, பிப்ரவரி மாதத்தில், 5 கிணறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. ஹரிஜனங் களுக்காக வகுக்கப்பட்ட திட்டத்தின் கீழ், இரு கிணறுகள் தோண்டப்பட்டன. 90 டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப் பட்டது. 10 முதியோர் பள்ளிகளும், 5 சமூகக் கல்வி நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டன. முன்னூரில் மாதர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 1,500 ரூபாய் பெறுமான கதர் உண்டியல்களும், 100 சர்க்காக்களும் விற்கப்பட்டன. இந்திய செஞ்சிலுவை சங்கத்தினர் 3 கிராமங்களுக்கு விஜயம் செய்து, கண் நோய்களால் பீடிக்கப்பட்டவர் களுக்குச் சிகிச்சை அளித்தனர்.

வள்ளியானை வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, பிப்ரவரியில், 14 நோயுற்ற கால்நடைப் பிராணிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. 6 ஓராசிரியர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. 10 சமூகக் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. சமூக சேவை சங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. ஒரு சிறுவர் பூங்காவும் அமைக்கப்பட்டது. 21 முதியோர் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அவற்றில் மொத்தம் 520 பேர்கள் கல்வி கற்று வருகிறார்கள். இரு இளைஞர் சங்கங்கள் அமைக்கப் பட்டன.

செய்தித் திரட்டு

திருவான்மியூர் குப்பத்தில் பாதை திறப்பு விழா

சென்னை சர்க்கார் முதல் அமைச்சர் திரு கே. காமராஜ் நாடார் 1956-ம் ஆண்டு மார்ச்சு மீ 3உ சனிக்கிழமை அன்று திருவான்மியூர் குப்பத்தில் ஓர் புதிய பாதையைத் திறந்து வைத்தார்.

விழாவிற்கு தமிழ்நாடு கிராம முன்னேற்ற ஐக்கிய சங்கத் தலைவர் திரு கே. கே. ஸ்ரீனுவாச பிள்ளை தலைமை வகித்தார். புதுவை அரசாங்க அமைச்சர்களான திருவாளர்கள் ஜெ. சந்திர சேகரன், தக்ஷிணாமூர்த்தி, சட்டசபை அங்கத்தினர் திரு என். ராமகிருஷ்ணய்யர், ஜில்லா போர்டு உறுப்பினர் திரு. தேவராஜுலு நாயகர், திரு கே. பி. கந்தசாமி செட்டியார் மற்றும் பல முக்கியமானவர்கள் கலந்துகொண்டனர்.

திரு ஸ்ரீனுவாச பிள்ளை அமைச்சர்களையும் மற்றவர்களையும் வரவேற்றுப் பேசினார். திரு எம். கோதண்டராமன் கடற்கரை இளைஞர் மன்றத்தினர் சார்பில் வரவேற்பு இதழை முதல் அமைச்சர் அவர்களுக்கு வாசித்துக் கொடுத்தார்.

முதல் அமைச்சர் பாதையைத் திறந்துவைத்துப் பேசுகையில் சொன்னதாவது :—கடற்கரை இளைஞர் மன்றத்தாராலும், மற்ற ஸ்தல வாசிகளாலும் போடப்பட்ட இந்த சாலையைத் திறந்து வைக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டதற்கு நன்றி செலுத்துகிறேன். முன்பெல்லாம் இம்மாதிரியான ரஸ்தாக்களை எவ்வளவு நாளானாலும் அரசாங்கம் தான் போடவேண்டுமென்றிருந்தது. இப்போது சுதந்திரம் கிடைத்ததும் மக்கள் விழிப்படைந்து கூடியவரையில் தாங்களாகவே தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முயற்சிக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கின்றனர். குப்பத்தில் வசிக்கும் நீங்கள் காலையில் மீன் பிடிக்கச் சென்று மாலையில் களைப்புடன் திரும்புகிறீர்கள். ஆகையால் உங்களால் இம்மாதிரி வேலைகளில் அதிகமாக ஈடுபடமுடியாது. ஆகவே கிராம முன்னேற்ற சங்கம்

முதலமைச்சர் ஸ்ரீ கே. காமராஜ், திருவான்மியூர் குப்பத்தில், ஒரு புதிய பாதையைத் திறந்துவைத்தார்.

போன்ற சமூக ஊழிய ஸ்தாபனங்கள் இம்மாதிரி வேலை களைச் செய்ய உதவவேண்டும். தமிழ்நாட்டில் கடற்கரை யில் வாழும் மீன் பிடிப்போர் லக்ஷக்கணக்கில் இருக்கி றார்கள். சில இடங்களில் அவர்களுக்குக் குறைந்த வட்டி யில் கடன் உதவி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அதிக வட்டிக்கு கடன் வாங்கி மக்கள் துன்பப் படுவது அரசாங்கத்திற்குத் தெரிந்ததுதான். படகுகள் கட்டுவதற்கும், வலை நூல் வாங்கவும் கூட்டுறவு ஸ்தாபனத் தின் மூலம் கடன் உதவி அளிக்க அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் விலை போகாத மீன்களை சில நாட்கள் வைத்து விற்க நவீன சாதனங்களை அளிக்கும் யோசனையையும் சர்க்கார் கவனித்து வருகிறது. இதனால் மீன்பிடிப்போர் நஷ்டப்படாமல் நல்ல விலைக்கு மீன்களை விற்க ஏதுவாயிருக்கும். மீன் பிடி மக்கள் ஆழ்கடல் சென்று மீன் பிடிக்க அரசாங்கம் பல திட்டங்களை மேற்கொண்டுள்ளது. மக்கள் இத் திட்டங்களை நிறைவேற் றுவதில் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

பின்னர் சென்னை சட்டசபை உறுப்பினர் திரு என். ராம கிருஷ்ணய்யர், புதுவை அரசாங்க அமைச்சர் திரு தக்ஷிண மூர்த்தி ஆகியோர் பேசிய பின்னர் கடற்கரை இளைஞர் மன்றத் தலைவர் திரு நாமதேவ் நன்றி கூறினார்.

திருவான்மியூர் குப்பத்தைக் கிராமத்துடன் இணைக்கும் சுமார் 7 பர்லாங் நீளமுள்ள இந்த பாதை இரண்டு பகுதி களாகப் போடப்பட்டது. முதல் பகுதி சர்விஸ் சிவில் இன்டர்-நேஷனல் ஸ்தாபனத்தினர் தமிழ்நாடு கிராம முன்னேற்ற ஐக்கிய சங்கம், கடற்கடை இளைஞர் மன்றத் தினர் மற்றும் பல பொதுநல ஸ்தாபனத்தினரின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டது. இதன் நீளம் சுமார் 3 பர்லாங். இதில் பங்குகொண்ட ஸ்தாப னங்கள்—திருவான்மியூரில் நீலங்கரை, கொட்டிவாக்கம், ஈச்சம்பாக்கம், உத்தண்டி, சோழிங்கநல்லூர், காவலூர், கோயிலம்பாக்கம் ஆகிய கிராமங்களிலுள்ள கிராம சங்கங்கள், சென்னையிலுள்ள பாரததேவி தேசீய வாலிபர் சங்கம், தேசீய வாலிபர் சங்கம், இந்திய யுவர் சங்கம், கோகுலம் சங்கம், அபிராமபுரம் சங்கம், மாதவபுரம் யுவர் சங்கம், பெல்லோஷிப், ஆர்ட்ஸ் காலேஜ், சேவா சமாஜ், தியாகராய கல்லூரி சமூக சேவா சங்கம், குமரன் தேசீய சேவா சங்கம், பல்லாவரம் மகாத்மா சேவா சங்கம்.

இரண்டாவது பகுதி ஸ்தல கடற்கரை இளைஞர் மன்றத் தினர் தமிழ்நாடு கிராம முன்னேற்ற ஐக்கிய சங்கத்தின் ஒத்துழைப்புடன் அமைத்து முடிக்கப்பட்டு வருகிறது. இதன் நீளம் சுமார் 3 பர்லாங். இப்பாதையின் மொத்த செலவு உழைப்பு உட்பட சுமார் 10 ஆயிரம் ரூபாய்.

* * * * * *

கமுதி வட்டாரம்

ராமநாதபுரம் ஜில்லாவில், 1956-ம் ஆண்டு ஏப்ரல் மீ 1-ந் தேதி யன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நான்கு வட்டாரங்களில் கமுதியும் ஒன்றாகும். இவ்வட்டாரத்திலே, துவக்க விழா காலை 8-30 மணிக்கு ஆரம்பமாயிற்று. நாதசுர இசையுடன், ஊர்வலம் ஒன்று, கமுதியிலுள்ள பல முக்கிய தெருக்கள் வழியாகச் சென்று, பஞ்சாயத்து போர்டு பூங்காவை அடைந் தது. அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்துக்கு, ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு, எம்.எல்.ஏ. தலைமை வகித்துப் பேசினார். கமுதி வட்டார அலுவலகத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், ராமநாதபுரம் கலெக்டர் ஸ்ரீ கே. எஸ். மேனன், சமுதாய நலத் திட்டத்தின் குறிக்கோள்களை விளக்கிக் கூறினார். பஞ்சாயத்து போர்டு தலைவர் ஸ்ரீ ஆர். எம். டி. எஸ். சவுந்தரபாண்டிய நாடார் பேசுகையில் கிராம மக்கள் திட்ட நிறைவேற்றத்துக்காக, ஒத்துழைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். கூட்டம் முடிந்த பிறகு, ஹரிஜன பையன்களுக்கும், அனாதைச் சிறுமிகளுக்கும், புதிய வேஷ்டிகளும் சேலைகளும் அளிக் கப்பட்டன. கமுதி வட்டாரத்திலுள்ள பேரையூரில், கிராம ரஸ்தாவேலையை, ராமநாதபுரம் கலெக்டர் துவக்கி வைத் ததுடன், குடிநீர் தேக்கத்துக்குரிய தொட்டியைக் கட்ட, அஸ்திவாரக் கல் நாட்டினார். மேலும் அவர், பால் வழங்கு கூட்டுறவு சங்கம் ஒன்றையும் ஆரம்பித்து வைத் தார். அபிராமம், நகரத்தாகுறிச்சி, ஆனையூர், சடைய நேந்தல், வங்காருபுரம், மண்டல மாணிக்கம், திம்மநாத புரம் ஆகிய கிராமங்களிலும், வட்டார துவக்கவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

காங்கய வட்டாரம்

இப்புது வட்டாரம், 1956-ம் ஆண்டு ஏப்ரல் மீ 1-ந் தேதி யன்று, ஆரம்பிக்கப்பட்டது. அகல்ரா பாளையம், வீராணம் பாளையம், கவந்தம் பாளையம், வீவி பாளையம் முதலிய கிராமங்களில் வட்டார துவக்க விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பள்ளிக்கட்டிடங்கள் கட்ட இக் கிராமங் களில், கால்கோள் விழாக்கள் நடை பெற்றன.

சீர்காழி வட்டாரம்

இந்த தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரம், 1956-ம் ஆண்டு ஏப்ரல் மீ 2-ந் தேதியன்று, சமுதாய நலத்திட்ட வட்டார மாக மாற்றப்பட்டது. தென் பாதி உயர்தர ஆரம்ப பள்ளி யைச் சேர்ந்த புதுக் கட்டிட மொன்றும், மதனத்திலுள்ள ஜில்லா போர்டு ஆரம்ப பள்ளிக்கட்டிடமொன்றும் திறந்து வைக்கப்பட்டன. சீர்காழியில், வாணிவிலாஸ் எய்டட் ஆரம்ப பள்ளிக் கட்டிடத்துக்காக கால்கோள் விழாவும் நடைபெற்றது.

கல்லுப்பட்டி வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் 3 இராப்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. 6 சமூகக் கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்டன. 5 இளைஞர் மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 7 கிணறுகள் தோண்டப்பட்டு, 9 கிணறுகள் புதுப்பிக்கப்பட்டன. 5 மதகு பாலங்களும் அமைக்கப்பட்டன. வார்தா செக்கு பயிற்சித் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறி வருகிறது.

தொழில் துறையில் மாணவருக்குச் சிறந்த பயிற்சி

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையின் சார்பிலுள்ள வள்ளலார் மாணவர் இல்லத்தில் ஒரு மருத்துச்சாலை கட்டுதற்குக் கால்கோள் விழா 18-3-56-ல் நடைபெற்றது. டாக்டர் சுந்தரவதனம் பெயரால் டாக்டர் சுந்தரவதனம்-தேரையர் மருத்துச்சாலை என அதற்குப் பெயரிடப் பெற்றது. சென்னை சமூக நலக்குழுவின் உறுப்பினர் திருமதி அமிர்த ராமசுப்பிரமணியம், பி.ஏ., எல்எல்.பி., அவர்கள் கால்கோள் ஆற்றினார்கள். சென்னை மெயில் இதழின் செய்தி ஆசிரியர் உயர்திரு. வி. பி. வி. ராஜன் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்றார். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் உயர்திரு கக்கன், திருமதி பார்வதி கக்கன் அவர்கள் மாணவரில்லத்தில் குழந்தைகள் விளையாட்டிற்கென அமைத்துள்ள ஊஞ்சலைத் தொடங்கி வைத்தார்.

மருத்துச்சாலை கால்கோள் விழா, வாலாஜாபாத்

தாமும் நன்றாக வாழ்ந்து நாட்டுக்கும் உதவிபுரிவது எவ்வாறு என்பதை இந்துமத பாடசாலை மாணவர்கள் நன்கு கற்கிறார்கள். தொழிலின் மேன்மையை உணரவும் எந்தத் தொழிலைச் செய்வதிலும் இழிவில்லை என்பதைத் தெரிந்து எதனையும் ஆர்வமுடனும் செம்மையாகவும் செய்யவும் அவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். இப்பாடசாலை மாணவர்கள் வருங்காலத்தில் சிறந்து விளங்குவார்கள் என்று தலைவர் தம் முன்னுரையில் குறிப்பிட்டார்.

கால்கோள் ஆற்றிய திருமதி அமிர்த ராமசுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில் இந்துமத பாடசாலையின் நடைமுறைகள் மிக நன்றாகயிருக்கின்றன என்றும் வினோபாவே முதலியவர்கள் நேரில் வந்து பார்த்தால் பெரிதும் மகிழ்வார்கள் என்றும் கூறினார்.

திருமதி சரசுவதி பாண்டுரங்கம், திருமதி பார்வதி கக்கன், ஆகியோர்கள் பிறகு பேசுகையில் பாடசாலை பொது மக்கள் உதவிக்கு மிகவும் உரியது என்றும், இதன் வளர்ச்சி எல்லாரையும் மகிழ்விக்கிறது என்றும் கூறினார்கள்.

பாடசாலையின் பழைய மாணவர் மா. இளஞ்செழியன், எம்.ஏ., அவர்கள் பாடசாலையின் சிறப்பை எடுத்துக்கூறி, பாடசாலைக்கு உதவி செய்ய எத்திறத்தாரும் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்றும் பாடசாலையின் வாயிலாக இன்சூர் செய்வது சிறந்தது என்றும் கூறி முடித்தார்.

பாடசாலைச் செயலாளர் திரு வா. தி. மாசிலாமணி முதலியார் யாவருக்கும் நன்றி கூற விழா இனிது நிறைவேறியது.

கிராம மண்பாண்டத் தொழில் அபிவிருத்திக்கு நிதி உதவி

இந்திய சர்க்கார் கிராம மண்பாண்டத் தொழிலின் அபிவிருத்திக்காக, மேற்கொண்டு கடனுதவியும், சகாயத் தொகைகளும் வழங்கியுள்ளனர்.

ஓடுகளின் உற்பத்திக்காக, மைசூருக்குக் கடனாக 6,000 ரூபாயும், சகாயத் தொகையாக 4,700 ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது காணுப்பூரிலும், டி. கல்லுப்பட்டியிலும் மாதிரி உற்பத்தி நிலையங்களின் நிர்வாகச் செலவுகளுக்காக அகில இந்திய காதி கிராமத் தொழில்கள் போர்டுக்கு 2,250 ரூபாய்க்குமேல் வழங்கப்பட்டிருக்கிறது.

மற்றும் மேற்கு வங்காளத்துக்குக் கடனாக 34,000 ரூபாயும், மத்திய பிரதேசத்துக்குச் சகாயத்தொகையாக 20,000 ரூபாயும், கடனாக 3,500 ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது.

தேனீ வளர்ப்புத் தொழிலின் அபிவிருத்திக்காக முன்னர் வழங்கப்பட்ட தொகையில், பயன்படுத்தப்படாமல் உள்ள 36,000 ரூபாயை நடப்பு நிதி வருஷத்தில் உபயோகித்துக்கொள்ள போர்டுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

கைக்குத்தல் அரிசித் தொழில் அபிவிருத்தி

கைக்குத்தல் அரிசி உற்பத்தியைப் பெருக்குவதன்மூலம், கிராமங்களில் மேலும் பலருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கின்றன என்று உற்பத்தி மந்திரி, ஸ்ரீ கே. ஸி. ரெட்டி சமீபத்தில் லோக் சபாவில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

கைக்குத்தல் அரிசி தயாரிப்பதற்கான திருந்திய உபகரணங்களைக் கண்டுபிடிப்பதற்காக, அதற்காகும் செலவில் 50 சத விகிதத்தை சகாயத் தொகையாகக் கொடுப்பதற்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் அங்கீகாரம் பெற்றுள்ள ஸ்தாபனங்களுக்கும், கைக்குத்தல் மூலம் அவைகளில் தயாரிக்கப்படுகிற அரிசிக்கு, ஒரு மணங்கு நெல்லுக்கு ஆறு அணா வீதம் சகாயத் தொகை அளிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டதென்றும் அவர் கூறினார். இதற்கான ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக உபகாரச் சம்பளங்கள்

வழங்கப்பட்டன ; நெல்லை வாங்கி சேமித்து வைத்துக் கொள்வதற்கும், உபகரணங்களைத் தயார் செய்வதற்கும் கடன் தொகைகள் கொடுக்கப்பட்டன. ஆராய்ச்சி, பரிசோதனை வேலைகளை மேற்கொள்வதற்கும் பண உதவிகள் அளிக்கப்பட்டன.

கைக்குத்தல் அரிசி 1953–54-ல் 207·6 லட்சம் டன்னும், 1954–55-ல் 182·4 லட்சம் டன்னும் உற்பத்தி செய்யப்பட்டதாக ஸ்ரீ ரெட்டி அறிவித்தார்.

ஆத்தூர் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில், வீரகனூர், சேந்தாரபட்டி, தலைவாசல் ஆகிய ஊர்களில் நூற்புப் போட்டிகள் நடைபெற்றன. வீரகனூர், கொண்டையம்பள்ளி, காட்டுக்கோட்டை, சித்தேரி ஆகிய ஊர்களில் ஹரிஜன தினம் கொண்டாடப்பட்டது. 5 ரஸ்தா வேலைகள், 12 பள்ளிக் கட்டிட வேலைகள், மொத்தம் 5,265 அடி நீளத்துக்கு கட்டிட ஜலதாரை அமைக்கும் வேலைகள் முதலியவை பூர்த்திசெய்யப்பட்டன. பழக்காடு பள்ளிக் கட்டிடத்தை சேலம் கலெக்டர் திறந்து வைத்தார். கோனேரிபட்டியிலும், காட்டுக்கோட்டையிலும், சிறுவர் பூங்காக்கள் திறந்து வைக்கப்பட்டன.

பெத்தநாயக்கன்பாளையம் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில், 40 ஏக்கர் நிலப்பரப்பில், பயிர் பூச்சி ஒழிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 18 கம்போஸ்டு உரக்குழிகள் தோண்டப்பட்டன. 10 தொழு உரக்குழிகளும் தோண்டப்பட்டன. 589 நோயுற்ற கால் நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில், 231 ரூபாய் பெறுமான கதர் உண்டியல்கள் விற்கப்பட்டன. 5 பொது கிணறுகள் சுத்தம் செய்யப்பட்டன. 25 குஷ்டரோகிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. 4 மக்கள் மன்றங்களும், 12 முதியோர் கல்வி நிலையங்களும், 7 புதிய பள்ளிகளும், 20 சமுகக் கல்வி நிலையங்களும், 3 சிறுவர் பூங்காக்களும் ஆரம்பிக்கப்பட்டன.

காவேரிபட்டிணம் வட்டாரத்தில்

இவ் வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு மார்ச்சுமாதத்தில், 13 மக்கள் மன்றங்கள் அமைக்கப்பட்டன. 10 சமுதாய மன்றங்கள் அமைக்கப்பட்டன. 2 ரோடு பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 25 முதியோர் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. புதிதாக ஒரு கூட்டுறவு சங்கம் பதிவு செய்யப்பட்டது.

காதி அபிவிருத்திக்கு மத்திய நிதி உதவி

இந்திய சர்க்கார், கதர் உற்பத்தித் தொழிலின் அபிவிருத்திக்காக, அகில இந்திய காதி கிராமத் தொழில்கள் போர்டுக்கு சகாயத் தொகையாக 43 லட்ச ரூபாயும், கடனுதவியாக 16 லட்ச ரூபாயும் வழங்கியுள்ளார்கள்.

கதர் துணி விற்பனைகளின் மீது, ரூபாய்க்கு மூன்றுணு வீதம் தள்ளுபடித் தொகை அளித்து வருவதற்காக 30 லட்ச ரூபாய் பயன்படுத்தப்படும். வஸ்திர ஸ்வலம்பன் (துணியில் சுயதேவைப் பூர்த்தி) திட்டம் சம்மந்தமாக சகாயத்தொகை அளித்து வருவதற்காக 4 லட்ச ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. சலுகை விகிதங்களில் உபகரணங்களை விநியோகித்து வருவதற்குச் சகாயத்தொகை அளிப்பதற்காக 2 லட்ச ரூபாய் செலவழிக்கப்படும். கைநூற்பைப் பிரபலப்படுத்துவதற்காக $1\frac{1}{2}$ லட்ச ரூபாய் செலவழிக்கப்படும். நூற்புப் போட்டிகளை ஆரம்பித்து நடத்துவதற்காகவும், பரிசுகளை வழங்குவதற்காகவும் 30,000 ரூபாய் செலவழிக்கப்படும். அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் கதர் துணிகளுக்குச் சகாயத்தொகை அளிப்பதற்காக, போர்டிடம் மேற்கொண்டு 5 லட்ச ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

கடன் தொகையில், முஸப்பர்பூரில் உள்ள பீஹார் கிராமோத்தியோக சங்கத்துக்கு 10 லட்ச ரூபாயும், பம்பாய் கிராமத் தொழில்கள் போர்டுக்கு 6 லட்ச ரூபாயும் கிடைக்கும். கடன் தொகைகள், கதர் உற்பத்தி, விற்பனை, ஆகியவற்றிக்கும், பஞ்சு, பருத்தி, கம்பளி, பட்டு, நூல் ஆகியவை போன்ற கச்சாப்பொருள்களையும், உபகரணங்களையும் வாங்குவதற்கும் பயன்படுத்தப்படும்.

1953-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட கதர் துணியின் மீதும், சில்லறை விற்பனைகளின் மீதும், குறிப்பிட்ட சில ஸ்தாபனங்களுக்கும், நிலையங்களுக்கும் $6\frac{1}{4}$ சதவிகிதத்தில் சகாயத்தொகை அளித்து வருவதற்காக, மொத்தம் 16,200 ரூபாய்வரை செலவிட போர்டுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு சகாயத்தொகை பெறுவதற்கு, சம்மந்தப்பட்ட ஸ்தாபனங்களில், 1952-ம் ஆண்டில் ஜூலை-டிசம்பர் மாதகாலத்துக்கான உற்பத்தி அளவையும் சில்லறை விற்பனை அளவையும் காட்டிலும், 1956-ம் ஆண்டு ஜூலை–டிசம்பர் மாதகாலத்தில் உற்பத்தியிலோ அல்லது சில்லறை விற்பனைகளிலே அல்லது இரண்டிலுமோ சேர்த்து குறைந்த பட்சம் 10 சதவிகிதம் உயர்வு ஏற்பட்டிருக்கவேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி பதினேரு ஸ்தாபனங்களுக்குச் சகாயத்தொகை வழங்கப்படும்.

மாயூரம் (கிழக்கு) வட்டாரத்தில்

கீழையூர் கிராமத்தில், காவேரிக்குக் குறுக்கே சுமார் 20,000 ரூபாய் செலவில் கட்டப்பட்ட பெரிய பாலம் ஒன்றை, 1956-ம் ஆண்டு பிப்ரவரி மீ 5உ யன்று, ரெவினியு அமைச்சர் ஸ்ரீ மாணிக்கவேலு நாயக்கர் திறந்து வைத்தார். குறுகிய காலக் கடனு 15,850 ரூபாயும், வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 5,150 ரூபாயும் விவசாயிகளுக்குக் கடனுக வழங்கப்பட்டது. மேலும், இவ்வட்டாரத்திலே, 1956-ம் ஆண்டு பிப்ரவரியில் 340 ரூபாய் பெறுமான கதர் விற்கப்பட்டது.

G.N.—4

கீழ் பவானியில் மாதர் நலம்

ஸ்ரீமதி பத்மா ரத்னம்

கும்மி பாட்டு

" ஊரான் ஊரான் தோட்டத்திலே " என்ற இசை.

இந்தியா தேசம் செழிப்புறவே—கெட்ட
வஞ்சனை யின்றியே வாழ்ந்திடவே
அஞ்சாண்டு திட்டத்தை கொண்டுவந்தாரென்று
ஆடிக்கும் மியடியுங்கடி—நலன்
கோரிக் கும்மியடியுங்கடி.

பெண்டிர்க்கு வேண்டிய பெரிய திட்டங்கள்
கண்டுகொண்டோம் கணக்கில்லாமலே
அண்டை வீட்டுக்காரர் சண்டையைவிட்டு நாம்
கண்டடைந்த நலன் பாருங்கடி—அது
வேண்டுமென ஓன்றாய் சேருங்கடி.

கீழ்பவானி சமுதாயத் திட்டம்—அதில்
வாழ்ந்திடும் பெண்கள் உயர்ந்திடவே
கோழையாம் பேதையர் கூடிக்குலாவியே
தொழிலுடன் கல்வியே கற்பதைப்பார்—அங்கு
ஏழைகள் உய்விக்கும் வழிதனைக் கேள்.

கல்வியை யாவரும் கற்றிடவும்—மெல்ல
பல்துறை கைத்தொழில் செய்திடவும்
நல்வழி காட்டி திகழ்ந்திடவும்—அந்த
நல் சங்கம் செய்திடும் நன்மை பாரீர்—எங்கும்
செல்வம் புரண்டிடும் செய்தி கேளீர்.

மாதர் சங்கமதில் மாதர்கள் எல்லோரும்
மாற்றியமைத்த மனப் போக்கைப்பார்.
மாநிலம் செழிக்க மற்றவர் திகைக்க
மங்கையர் செய்திடும் விந்தையைப்பார்—அவர்
மங்காது போற்றிடும் சங்கத்தைப்பார்.

தாய்கள் சிலர் அங்கு தைத்திடவும்—மற்றும்
பாலர் சிலர் விளையாடிடவும்.
மங்கையர் எல்லோரும் நூற்கவும், பின்னவும்
சங்க மென்று தலைத்தோங்குதடி—நல்ல
அங்க முகங்களும் காணுதடி.

கும்மியடிக்கவும் கோல்கள் அடிக்கவும்
பாட்டு பஜனை பயின்றாடவும்
பக்ஷணம் பலவகை செய்தாடவும் அவர்
பண்புடன் பயில்வதை பாருங்கடி—நல்ல
பாரதமக்களே சேருங்கடி.

நாட்டுச் சுகாதாரம் நன்மை தருமென
நன்றாக வீட்டிலதை அமைத்து
சீரிய குடித்தனம் சிக்கனமாகவே
செவ்வையாய் திகழ கற்பாரடி—அவர்
சிறந்த பெண்களு மாவாரடி.

ஊருக்கு ஊர்கட்சி வேண்டாமடி—உடன்
நேருக்குநேர் செய்ய வேண்டுமடி
பாருக்குள்ளே மாதர் பாங்காய் செழித்திட
பற்றிடு அஞ்சாண்டு திட்டம் தன்னை—உடன்
கற்றிடு ஒற்றுமை பற்றுதலை.

திட்டமென்றால் பெரும்திட்டமடி—நம்ம
கஷ்டங்கள் போக்கவே வந்ததடி
மட்டில்லா மாபெரும் மாதர் சங்கமதை
கட்டிப் பிடித்துமே காத்திடுவோம்—அதை
தட்டிக் கொடுத்து வளர்த்தாடுவோம்.

சென்னை ராஜ்யத்தில் சமுதாய அபிவிருத்தி

சமுதாய அபிவிருத்தித் திட்டம், 4 பெரும் வட்டாரங்களிலும், 24 சமுதாய நலத்திட்ட வட்டாரங்களிலும், 38 தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரங்களிலும் சென்னை ராஜ்யத்தில் நிறைவேறி வருகிறது. இந்த ராஜ்யத்திலுள்ள கிராமப்புறங்களில் வாழும் மக்கள் எண்ணிக்கை 290 லட்சம். இவர்களில், 88 லட்சம் பேர் வாழும் வட்டாரங்களில், சமுதாய அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இராமநாதபுரம் ஜில்லாவில், 1956-ம் ஆப்ரல் 1-ந்தேதி முதல், 4 புது வட்டாரங்களிலே, அபிவிருத்தி வேலைகள் தொடங்கப்பட்டன. 11 தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரங்கள் சமுதாய அபிவிருத்தித் திட்ட வட்டாரங்களாக மாற்றப்பட்டன.

இரண்டாவது திட்ட காலத்தில், மேலும் 315 புது வட்டாரங்களில், தேசிய வளர்ச்சித் திட்டம் நிறைவேறும். தேசிய வளர்ச்சித் திட்ட வட்டாரங்களில் சில, சமுதாய அபிவிருத்தித் திட்ட வட்டாரங்களாக மாறும். இவ்வாறாக, ராஜ்ய முழுவதும், சமுதாய நலத் திட்டம் அமலுக்கு வந்துவிடும்.

அற்புத மாறுதல்

[சமுதாய நலத் திட்டங்கள் நிறைவேறி வரும் பல கிராமங்களுக்கு, சென்னையிலிருந்து பத்திரிகை நிருபர்கள் கோஷ்டி ஒன்று சமீபத்தில் விஜயம் செய்தது. அக்கோஷ்டியினர், தாங்கள் நேரில் கண்டறிந்த சமுதாய நலத்திட்ட வேலைகளைப்பற்றித் தங்களுடைய பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள். 'சுதேசமித்திரனி'லும் 'கல்கியி'லும் வெளிவந்துள்ள கட்டுரைகளில் காணப் படும் சில, முக்கிய பகுதிகள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

—ஆசிரியர்]

சென்னை சர்க்கார், வெளி ஜில்லாக்களில், முக்கியமாக, கிராமப் பகுதிகளில் சமுதாய நலத் திட்டங்களை எவ்வாறு நிறைவேற்றி யிருக்கிறார்கள் என்பதைப் பார்வையிடப் பத்திரிகையாளர்களை அழைத்திருந்தார்கள். எங்கள் பிர யாணம் 3-2-56 அன்று நீலகிரி எக்ஸ்பிரஸில் துவங்கியது.

ரயில் ஈரோடு ஜங்ஷனில் நின்றதும் சர்க்கார் அதிகாரிகள் எங்களுக்கு நல்வரவு கூறித் தயாரா யிருந்த ராணுவ ஜீப் கார்களில் எங்களை ஏற்றி ப்ராஜெக்ட் ஹவுஸுக்கு அழைத் துச் சென்றார்கள். அது சகல நவீன வசதிகளோடும் கூடிய விருந்தினர் இல்லம். அதில் தங்கிக் காப்பி யருந்தி இளைப்பாறிய பிறகு, நாங்கள் கிராமப் பிரவேசம் துவங்கி ேனாம். கிராமப் பிரதேசங்களில் புகுந்த பிறகுதான், கிராமச் சூழ்நிலையை என்னால் உணர முடிந்தது. பட்டணத்து மனிதர்களால் பகுத்து உணர முடியாத பல தொழில்கள் கிராமங்களில் இருக்கின்றன. அவற்றை அழிய விடாமல் புத்துயிர் ஊட்டுவது நம் கடமை என்பதும் என் உள்ளத்தில் வேரூன்றலாயிற்று. கிராமத்தில் உள்ள ஒவ்வொன்றும் ஆச்சரியமான எளிய சாதனம். மண் பாண்டம், அதைத் தயார் செய்யும் சக்கரம், கொல்லர் உலை, துருத்தி, எண்ணெய் ஆட்டும் செக்கு, அதைச் சுற்றி வரும் மாடுகள், கவலை ஏற்றம் இழுக்கும் மாடுகள், உணவுக்கு அடுத்தபடி மனிதனுக்கு இன்றியமையாத பொருளான உடையைத் தயாரித்துத் தரும் கைத்தறி— ஆகியவைகள் யாவும் நமது கிராமக் கைத்தொழில் சாதனங்கள். நவீன முறையில் இவற்றின் சக்தியைப் பெருக்கிக் கிராமங்களில் தொழில் வளம் பெருகச் செய்வது ஒவ்வொருவருடைய கடமையுமாகும். கிராமம் அழிந்து போனால் நகரம் அழிந்தமாதிரிதான். நகரவாசிகளாகிய நம்முடைய சுகவாழ்வுக்காகக் கிராமவாசிகள் உழைக்கும் உழைப்பைப் பார்த்தால் எப்பேர்ப் பட்டவனுடைய மனமும் உருகாமலிராது.

ஈரோடு, கோபி தாலுகாக்களில் நான் பார்வையிட்ட சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றிக் கூறுவ தற்கு முன் மேற்படி திட்டத்தை விளக்கவேண்டியது அவசியம்.

கிராமவாசிகளிடையே ஒரு புதிய கருத்தும் நாட்டமும் ஏற்படச் செய்து அதன் பயனாக அவர்கள் தங்கள் சொந்த முயற்சியினாலும், அரசாங்க உதவியினாலும் தங்கள் வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்தி செய்யக்கூடிய சூழ் நிலைகளை உண்டாக்கச் செய்வதுதான் சமுதாய நலத் திட்டம். விவசாயம், பிராணி வளர்ப்பு, நிலச் சீர்திருத்தம், நீர்ப்பாசனம், கல்வி, கலைகள், தொழில்கள், குடிசைத் தொழில்கள், கூட்டுறவு இயக்கம், போக்கு வரத்து வசதி முதலிய எல்லா அம்சங்களிலும் அபிவிருத்தி ஏற்பட வேண்டும். சுருக்கமாகச்சொல்லவேண்டுமானால், சமுதாய நலத் திட்டம் பொதுமக்களுக்காக, பொது மக்களைக் கொண்டு நடத்தப்படும் பொது மக்களின் திட்டம். பொருள் கொடுக்க இயலாதவர்கள் தங்கள் உடல் உழைப் பைக் கொடுக்கலாம். அதாவது 'சிரமதானம்' செய்ய லாம். நாங்கள் எங்கள் பிரயாணத்தில் கண்ட சில இடங் களில் சர்க்கார் மக்களின் உடல் உழைப்பை அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொண்டு அதற்குக் கூலியும் கொடுத்து உதவி யிருக்கின்றனர்.

" நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்

. . . .

எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந்தொழில் நாட்டுவம் வாரீர் "

என்ற மகாகவி பாரதியின் கவியை நினைவுபடுத்திக்கொண் டால் சமுதாய நலத்திட்டத்தின் தத்துவம் நன்கு விளங்கும்.

இவ்வாறு உயர்ந்த நோக்கத்துடன் திட்டமிடப்பட் டிருக்கும் சமுதாய நல அபிவிருத்தி விவரங்களைக் கொஞ்சம் பார்வையிடுவோம். உங்களுக்கும் தமிழகத்தின் அபிவிருத்தித் திட்டங்களைக்காண ஆவல் இருக்கும் என்று நம்புகிறேன். சரி, இனிப் பிரயாணத்தைத் தொடங்கு வோம்.

ஈரோடு தாலுகாவில் கவந்தப்பாடி கிராமத்தில் நடை பெற்றிருக்கும் அபிவிருத்திகளைப் பார்வையிடுவோம்.

மிருக வைத்திய சாலை இங்கே கட்டப்பட்டிருக்கிறது. வைத்தியசாலைக் கட்டடத்துக்கு பூமிதானம் செய்தவர்

கவந்தப்பாடி பஞ்சாயத்து போர்டு தலைவர் ஸ்ரீ ஸி. என். பழனிசாமிக் கௌண்டர். பொது மக்கள் ரூ. 7,500 கொடுத்துக் கட்டடம் எழுப்புவதற்கு உதவி செய்திருக்கின்றனர்.

கிராம மக்கள் தங்கள் பணத்தையும் உழைப்பையும் கொடுத்துத் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதால் அவர்களுக்கு, மேற்கூறிய அபிவிருத்திகள் தங்களுக்கே உரியவை என்ற எண்ணம் ஏற்பட்டு, கிராமப் பொது நலனில் அக்கறையும் ஆர்வமும் அதிகமாகின்றன.

கவந்தப்பாடியில் பசுக்களைச் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் சாதனங்களும் இடம் பெற்றிருக்கின்றன. இரண்டு பஞ்சாப் எருமைக் கடாக்களும், இரண்டு காங்கேயம் காளைகளும் மேற்படி சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன !

விவசாயிகளுக்கு வெள்ளாடுகள் வழங்கப்படுகின்றன.

இங்கு நல்ல முறையில் கோழிப் பண்ணை யொன்று திறக்கப்பட்டிருக்கிறது. 'ரோட் ஐலண்டு சிவப்புக் கோழி' என்ற சிறப்பு வாய்ந்த கோழியினம் முட்டை உற்பத்திக்கும் உயர் சாதிக் கோழிகளின் இனப் பெருக்கத்துக்கும் பெரிதும் உபயோகமாயிருக்கின்றன. மேற்படி உயர்குலக் கோழிகள் பத்து இருக்கின்றன. கோழிகள் ஈன்ற முட்டைகளைச் செயற்கை முறையில் அடைகாக்கும் சாதனமும் (Incubator) இருக்கின்றது. இந்தச் செயற்கை முறையின் உபயோகம் என்னவென்றால், இயற்கை முறையைவிட அதிகபட்ச முட்டைகளைப் பொரிக்கலாம் என்பதுடன், எல்லா முட்டைகளையும் வீணாகாமல் பொரிக்கலாம் என்பதுதான்.

ஆனால் செயற்கை எத்தனை பலத்தோடு இயற்கையுடன் போட்டியிட்டாலும், முக்கியமான விஷயங்களில் இயற்கைக்கு அது அடிபணிய வேண்டியிருக்கிறது. ஒரே அளவிலே உஷ்ணத்தைக் கட்டுப்படுத்தி யிருக்கிறார்கள், அந்த நவீன யந்திரத்தில். நூற்றிருபத்தொரு முட்டைகளை ஒரே சமயத்தில் அதில் குஞ்சு பொரிக்கலாம். ஆனால் இயற்கையாகக் கோழி அடை காக்கும் அவ்வளவு நேரம் யந்திரமும் அடை காத்தாக வேண்டும். அதாவது இருபத்தொரு நாட்கள், இடையறுத ஒரேமாதிரி உஷ்ணத்தில் இருந்தால்தான் முட்டைகள் பொரிகின்றன.

ஹரிஜனங்களுக்கு புது இல்லங்கள்

கவந்தப்பாடி வேலைத் திட்டங்களைப் பார்வையிட்டதும் நாங்கள் ஆவாரங்காட்டூர் என்னும் கிராமத்துக்குச் சென்றோம்.

தீமையிலிருந்தும் நன்மை விளைவதுண்டு என்பதற்கு அந்தக் கிராமத்தில் நிதரிசமான உதாரணம் பார்த்தேன்.

பல்லாயிரக்கணக்கான தரிசு நிலங்களைப் பண்படுத்திப் பயிரிடுவதற்கு வகை தேடிக்கொடுத்த பவானி சாகரத்தின் கால்வாய்களிலிருந்து பெருகும் கசிவு நீரினால் ஆவாரங்காட்டூர்ச் சேரியிலுள்ள வீடுகள் அழிந்துவிட்டன. அந்தச் சேரியில் வாழ்ந்த ஹரிஜன மக்கள் வீடு வாசல்களை விட்டு வேறிடத்துக்கு ஓடிக் குடி புகுந்தனர். அவர்கள் குடி



"களறிப் பயிட்டு" என்பது, மலையாளத்தில் வழங்கிவரும் உடற் பயிற்சி வகைகளில் ஒன்று. இளைஞர் சங்கங்கள் இதைப் பயில்வதில் ஊக்கம் காட்டுகின்றனர்..

....அல்லிக்குண்டத்தில் ஹரிஜன மக்கள் வாழுமிடத்தில் கட்டப்பட்டிருக்கும் புதிய கிணறு....



[illegible] குளத்திலுள்ள கால்நடை முதலுதவி நிலையத்தில் நோயுள்ள மாட்டுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது....



....ஆலங்குடி வட்டாரத்திலுள்ள திருவரங்குளத்தில் கட்டப்பட்டிருக்கும் சர்வோதய கிணறு....



....ஆலங்குடியில் விளையாட்டு விழா....சுமார் 700 பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டனர்....

... அமைக்கப்பட்டிருக்கும் சிறுவர் பூங்கா

....ஆலங்குடி வட்டாரத்திலுள்ள எல்லைபட்டி கிராம மக்கள், புதிய பாதை ஒன்றை அமைப்பதில் ஈடுபட்டுள்ளனர் ...

புகுந்திருக்கும் வீடுகளை வீடுகள் என்று குறிப்பிடுவது தவறு. பொந்துகள் அல்லது புற்றுகள் என்று தான் குறிப்பிடவேண்டும். ஒரு சிறிய வீட்டுக்குள் எட்டுப் பேர்கள் பத்துப் பேர்கள் பதுங்கி வாழும் நிலையைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை.

சர்க்கார் அவர்களுக்கு நல்ல உதவியைச் செய்திருக்கிறது. மேற்படி வாய்க்கால் கசிவு நீரினால் வீடிழந்த நாற்பத்தாறு ஹரிஜனக் குடும்பங்களுக்குப் புது இல்லங்கள் அமைத்துத் தர முன் வந்து ஆறு ஏக்கரா நிலம் வழங்கியிருக்கிறது. அந்த இடத்தில் புது இல்லங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வீட்டுக்கும் சமுதாய நலத்திட்ட நிதியிலிருந்து ரூ. 250 கடனாக வழங்கப்படுகிறது. சர்க்கார் ஒவ்வொரு வீட்டுக்கும் சகாய நிதியாக ரூ. 100 வழங்குகிறது. இந்தத் தொகைக்கு மேல் தேவைப்படும் பணத்துக்கு, கிராம மக்கள் வீடு கட்டத் தேவைப்படும் பொருள்களாகவும், பணமாகவும் கொடுத்து உதவி யிருக்கின்றனர்.

மேற்படி கீழ் பவானி வாய்க்கால்களில், கசிவு நீர் சிறு வாய்க்கால்களாகப் பெருகிச் சேரிகளை அழிக்கவில்லை யென்றால், சேரிவாழ் மக்களுக்குச் சர்க்கார் புது வீடுகள் கட்டித்தர எந்நாளும் முன் வந்திருக்கப் போவதில்லை. ஆகவே, கசிவு நீர்ப் பெருக்கத்தினால் ஏற்பட்ட நாச வேலைகளைக் கண்டு மனங் கசிவதைவிட, அதை வாழ்த்துவது தான் நியாயம் என்று எனக்குத் தோன்றியது.

ஆவாரங்காட்டூர் ஹரிஜனங்கள் எங்களை யெல்லாம் கண்டதும் தங்கள் கஷ்டங்களை யெல்லாம் கூறி, பாழடைந்த வீடுகளைக் காட்டிக் கண்ணீர் உகுத்தனர். அவர்களுக்காகக் கட்டப்பட்டு வரும் புது வீடுகளையும் பார்வையிட்டு விட்டு, அங்கிருந்து புறப்பட்டோம். கருமாண்டி செல்லிபாளையம், சாமி கௌண்டன் பாளையம், நசியனூர் முதலிய கிராமங்களுக்குப் போனோம். கருமாண்டி செல்லிப்பாளையத்தில் பள்ளிக்கூடம், ரேடியோ, விளையாடும் இடம், நூல் நிலையம் முதலியன சமுதாய நலத்திட்ட நிதியின் உதவியினாலும், பொதுமக்களின் உதவியினாலும் கட்டப்பட்டிருக்கின்றன. சாமி கௌண்டன் பாளையத்தில் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஜனங்களின் ஒத்துழைப்பும், சமுதாய நலத்தின் ஒத்துழைப்பும் சேர்ந்திருக்கின்றன என்பது தான் இதில் குறிப்பிடத்தக்கது.

நசியனூர் கிராமத்தில், முந்நூற்று அறுபத்தாறு கெஜ தூரத்துக்குச் சிமெண்ட்டில் சாக்கடைகள் கட்டப்பட்டிருக்கின்றன. மருத்துவ நிலையம் கட்டப்பட்டிருக்கின்றது. விளையாடும் இடம் அமைக்கப்பட்டிருக்கிறது. உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடம் ரூ. 14,000 செலவில் கட்டப்பட்டு வருகிறது. மாதர் சங்கத்தின் கட்டடம் உருவாகி வருகிறது. மேற்படி கட்டடங்களின் செலவுத் தொகையில் பாதியைக் கிராம மக்கள் மனமுவந்து கொடுத்திருக்கின்றனர் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். நசியனூர் கிராமத்தைச் சிறந்த கிராமமாக மதித்துச் சர்க்கார் ரூ. 1,000 பரிசு கொடுத்திருக்கின்றனர்.

பவானிக்கு அருகில் கிராம சேவக்குகளின் பயிற்சி முகாம் நிறுவப்பட்டிருக்கிறது. அங்கு நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். மேற்படி பயிற்சி முகாமின் தலைவர் திரு ரமணியும், ஆசிரியர் திரு மெய்கண்டாரும் எங்களை வரவேற்று உபசரித்தனர். மாணவர்கள் தாங்கள் பெறும் பயிற்சி விவரங்களை விவரித்துப் பேசினர்.

பிறகு முருகன் ஸ்தலமாகிய சென்னிமலைக்குப் போனோம். பத்தாயிரம் ஜனத்தொகை கொண்ட அவ்வூரில், குடித் தண்ணீர்க் கஷ்டம் தாங்க முடியாதது. ரூபாய் எழுபத்து நாலாயிரம் செலவில், 180 அடி ஆழம் வெட்டிக் கிணறு தோண்டி, ஜல விநியோகத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஜில்லா போர்டு நிதியிலிருந்தும் சமுதாய நலத்திட்ட நிதியிலிருந்தும் தாராளமாக இதற்கு நிதி வழங்கப்பட்டிருக்கிறது. ஜமக்காளம், துப்பட்டி முதலிய நெசவு வேலைகளுக்குச் சென்னிமலை பிரசித்தி பெற்ற ஊர்.

ஈரோடு, கோபிசெட்டிப் பாளையம் தாலூகாக்களில் பல கிராமங்களைப் பார்வையிட்டோம். எல்லாக் கிராமங்களிலும் சமுதாய நலத் திட்ட அபிவிருத்திகளைக் கண்டோம். இந்த அபிவிருத்தித் திட்டத்தினால் ஏற்படும் பல முக்கிய நன்மை கிராமங்களில் பலருக்கு வேலை கிடைத்திருப்பதுதான். வேலையில்லாக் கொடுமை தலைவிரித்தாடும் இந்நாளில் பலருக்கு வேலை கிடைக்கிறது என்பதே மகிழ்ச்சிக்குரிய விஷயம் அல்லவா? பிராஜக்ட் ஆபீஸர்கள், பிளாக் அபிவிருத்தி ஆபீஸர்கள், சமூகக் கல்வி ஆர்கனைசர்கள், உபாத்தியாயர்கள், விவசாய நிபுணர்கள், பிராணி வளர்ப்பு நிபுணர்கள், சுகாதார நிபுணர்கள், என்ஜினீயரிங் நிபுணர்கள் இப்படிப் பல துறைகளில் பலருக்கு வேலை கிடைத்திருக்கிறது. சர்க்காரின் சமுதாய நலத்திட்ட அமைப்பைக் குறைகூற அதில் எவ்வளவோ தவறுகள் இருக்கலாம். ஆனால், அதில் மக்களுக்கும் சர்க்காருக்கும் சுமுகமான தொடர்பு ஏற்பட இடம் இருக்கிறது என்பதை யாரும் மறக்கமுடியாது. கிராம மக்களுக்குப் பரஸ்பரம் நல்லெண்ணத்தையும் நல்லுறவையும் வளர்க்கும் ஒரு நல்ல திட்டம் என்பதையும் யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனால் அந்தத் திட்டம் சர்க்காரின் 'சிவப்பு நாடா' முறையில் சிக்கிப் பாழாகிவிடாமல் காப்பது மக்கள் கடமை.

கீழ் பவானி சாகரம்

வறண்ட பகுதிகள் உள்ள ஈரோடு, கோபிசெட்டிப்பாளையம், தாராபுரம் தாலூகாக்களில் நீர்ப் பாசன வசதி ஏற்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட திட்டம்தான் கீழ் பவானி சாகரம். பவானி நதி, மலைகளையும் குன்றுகளையும் குடைந்து கொண்டு சென்று காவேரியில் சேர்ந்து பல நதிகளாகப் பிரிந்து இறுதியில் கடலில் சங்கமமாகிறது. முன்பு, அணைக்கட்டு கட்டப்படுவதற்கு முன்பு, பவானி நதியின் பிரவாகம் அத்தனையும் வீணாகப் போய்க் கடலில் விழுந்து கொண்டிருந்தது. தண்ணீர், தண்ணீர் என்று

வானத்தைப் பார்த்துக் கதறிப் பாளம் பாளமாக வெடித்துக் கிடந்த பூமித் தாயின் தாபத்தைத் தணிக்காமல், நதியின் வெள்ளம் கடலை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் இப்பொழுது, மாபெரும் அணைக்கட்டுப் போட்டு நதியின் நீரைத் தேக்கிய பிறகு, இரண்டு லட்சத்து எழாயிரம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கிறது.

இந்த நீர்த் தேக்கத் திட்டம் நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஒரு முறை துவக்கமாயிற்று. அதாவது 1834-ம் ஆண்டிலேயே அணைத்திட்டம் உருவாவதற்கு ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. திட்டம் செயல் முறையில் உருப்பெருத தற்குக் காரணம் பொருளாதார நெருக்கடிதான். வருவாய் இல்லாத அந்தப் பிரதேசத்தில் இந்தப் பெரிய அணைக் கட்டை எப்படிக் கட்ட முடியும் ? இந்தப் பெரிய அணைத் திட்டத்தைச் செயலாக்கக் காரணமாயிருந்தவர் நம் விவசாய மந்திரி எம். பக்தவத்ஸலம் என்பதை நாம் பெருமையுடன் கூறலாம்.

அணைக்கட்டின் சிமெண்ட் கட்டடம், 1,523 அடி நீளம் இருக்கிறது. அந்தக் கட்டடத்தின் இருபுறமும் அமைக்கப் பட்டிருக்கும் மண்ணுலான அணை சுமார் மூன்று மைல் நீளம் இருக்கிறது. அணைக்கட்டின் மொத்த நீளம் ஐந்தரை மைல்.

பவானி சாகரம், மேலே கூறிய வானம் பார்த்து நிற்கும் வறண்ட பிரதேசங்களுக்கு வாய்ப்பாகக் கிடைத்த இணையற்ற ஒரு வரப்பிரசாதம் என்பதில் ஐயமில்லை.

கீழ் பவானியில் நீர்த் தேக்கம் மட்டும் அல்லாமல், சமுதாய நலத் திட்டமும் விரிவாக உருவாகியிருக்கிறது. கோவை ஜில்லாவைச் சேர்ந்த கோபிசெட்டிப்பாளையம், ஈரோடு, தாராபுரம், பவானி முதலிய தாலூகாக்களோடு, திருச்சி ஜில்லா கரூர் தாலூகாவிலிருந்து மூன்று கிராமங்களையும் சேர்த்து ஒரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இங்கு நடக்கவேண்டிய அபிவிருத்தித் திட்டங்களுக்காக ரூ. 65 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அங்கிருந்து நாங்கள் திருப்பூர் போய்ச் சேர்ந்தோம். அங்கே கதர் உற்பத்தியையும், வேலை முறைகளையும் பார்த்து விட்டு, நரிப்பரிச்சல் செங்கப்பள்ளி, விஜயமங்கலம் முதலிய கிராமங்களில் உள்ள ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களையும் பார்த்து விட்டுப் பெருந்துறை வந்து சேர்ந்தோம். இங்கு கோவை ஜில்லா கலெக்டர் பி. கே. நம்பியார் பத்திரிகைக்காரர்களுக்கு ஒரு தேநீர் விருந்தளித்தார்.

அன்றிரவு, காஞ்சிக் கோயில் என்னும் கிராமத்தில், " கல்வியா, செல்வமா ? எது நலம் ?" என்னும் நாடகம் பார்த்தோம். சமுதாய நலத் திட்ட ஊழியர்களே மேற்படி நாடகத்தில் பங்கு பற்றி மிகவும் சிறப்பாக நடித்தனர்.

மறுநாள் பழைய கோட்டைக்குப் போய்ப் பிரசித்தி பெற்ற காங்கேயம் காளைகளைப் பார்த்து விட்டுக் காளைகள் மாதிரி நடை போட்டுக் கொண்டு பல கிராம அபிவிருத்திகளைப் பார்த்தோம்.

......எலப்புள்ளியில் மாதர் சங்கம்.......

பழைய கோட்டைப் பட்டக்காரா, நல்ல சேனுபதி சர்க்கரை மன்ருடியார், எம். எல். சி. அவர்களின் தாராள மனப் பான்மையை அவசியம் குறிப்பிட்டாக வேண்டும். கீழ் பவானி சாகரத்தின் கால்வாய்களின் கசிவு நீரால் அழிந்து போய்விட்ட மேலப்பாளையம் கிராமத்தைப் புனர் நிர்மாணம் செய்ய அவர் பேருதவி புரிந்திருக்கிருர். ரூ. 10,000 மதிப் புள்ள பன்னிரண்டு ஏக்கர் நிலத்தைத் தானமாக வழங்கி யிருக்கிருர். ஐம்பத்தைந்து குடும்பங்களுக்கு நல்ல வீடுகள் கட்டித்தர ஏற்பாடாகியிருக்கிறது. கட்டி முடித்திருக்கும் வீடுகளைப் பார்வையிட்டபோது, சென்னை நகரத்தின் நெருக் கடியில் தவிக்கும் எனக்கு நானும் அந்த வீடிழந்த குடும் பத்தினர்களில் ஒருவளுக இல்லாமற் போனேமே என்றிருந்தது.

பிறகு அங்கிருந்து கோவை மார்க்கமாகப் பாலக்காடு போய்ச் சேர்ந்தோம்.

' பாலக்காட்டில், கோயல் மன்னம், கொட்டாயி, பெருங் கோட்டுக் குரிசி முதலிய கிராமங்களில் ஹரிஜனக் காலனி, குடி நீர்த்திட்டம், மிருக வைத்திய சாலை, பொழுது போக்கு ஸ்ளப், கோழிப் பண்ணை முதலிய அபிவிருத்திகளைப் பார் வையிட்டோம். கொட்டாயியில் உள்ள மஹிளா சமாஜத்தின் வேலை முறைகள் திருப்திகரமாயிருந்தன. தமிழ் நாட் டில் மாதர் சங்கம் என்று கூறுவதைத்தான் மலையாளத் தில் மஹிளா சமாஜம் என்கிருர்கள். ஓலவக்கோட்டில் 'நாயாடிகள்' காலனியைப் பார்த்தோம். இவர்கள் ஹரிஜனங்களைச் சேர்ந்தவர்கள். ஒரு காலத்தில் ஒதுக்கப் பட்டிருந்தவர்கள். தீண்டாமை என்னும் கொடுமைக்கும் அதிகமான 'பார்க்கவும் தகாதவர்கள்' (Unseeables) என்று பிரித்து வைக்கப்பட்டிருந்தவர்களுக்கு இப் பொழுது நிலமும் வீடும் வழங்கப்பட்டுப் புனர் வாழ்வு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் வீடுகள் மிகவும் சிறியவை; கோவை ஜில்லா ஹரிஜனக் காலனிகளை விடக்கிரயம் அதிகம் ஆகிறது. வீடுகளும் திருப்திபட்டுக் கொள்ளும் விதத்தில் அமையவில்லை.

பாலக்காடு சர்க்கார் ஆஸ்பத்திரி சமீபத்தில் நேருஜியால் திறந்து வைக்கப்பட்டது. எக்ஸ்ரே விடுதி, பிரசவ விடுதி இரண்டும் கட்டப்பட்டிருக்கின்றன. இவற்றின் மொத்தச் செலவு ரூ. 45,700. பத்திரிகையாளர்கள் பார்த்தபோது வெறும் கட்டடம் தான் காணப்பட்டது. அது பொதுஜன உபயோகத்துக்கு இன்னும் வரவில்லை. ஒவ்வொரு நாளும் பல பிரசவ கேசுகள் வரும்போது, ஏன் இந்த ஆஸ்பத்திரி வார்டு உபயோகமாகவில்லை என்பதற்குச் சரியான காரணம் கூறப்படவில்லை. மேற்படி விடுதிகளுக்கு ஆஸ்பத்திரி அபிவிருத்திக் கமிட்டி, ரூ. 20,000 நன்கொடை அளித் திருக்கிறது. இதையே பொதுமக்கள் பங்காகக் கொண்டு சமுதாய நல நிதியிலிருந்து உதவி புரியப்பட்டிருக்கிறது. நிதி உதவி பெறுவதில் காட்டும் சிரத்தையையே சர்க்கார் செயல் சாதனையிலும் காட்டவேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்ப்பதில் தவறு இல்லை.

பெருங்கோட்டுக் குரிசியில் ஒரு ஹரிஜன காலனி கட்டப் பட்டிருக்கிறது. ஸ்ரீ நாராயண நம்பூதிரிபாத் என்னும் அன்பர் தம் நிலத்தை ஹரிஜன் காலனி கட்ட வழங்கி யிருக்கிருர்.

மலபாரில் கல்வி அபிவிருத்திக்காக ஒன்றரை லட்ச ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. கொல்லங்கோடு ராஜாவினுல் நிர்வகிக்கப்பட்டு வரும் உயர் நிலைப் பள்ளிக்கு ரூ. 10,000 மான்யம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்படி ராஜா உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் "கிராத அர்ஜு நீயம்" என்னும் கதக்களி நடன நாடகத்தை மிகவும் சிறப்பாக நடத்திஞர்கள்.

மலம் புழா அணை

மலையாள பூமியின் செழிப்பை யெல்லாம் பார்த்துக் கொண்டு மலம்புழா அணைக்குப்போய்ச் சேர்ந்தோம்.

இந்த அணையின் காரணமாக மலபாரில் விவசாய அபிவிருத்தி கனிசமா யிருக்கிறது. கால்நடை அபிவிருத் தியும் அதிகரித்திருக்கிறது. ரூ. 3,84,490 செலவில் இப் பகுதியில் முப்பத்திரண்டு பாலங்களுக்கு அநுமதி தரப் பட்டிருக்கின்றது.

பாலக்காட்டிலிருந்து திவ்ய க்ஷேத்திரமான குருவாயூர் சென்று ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைத் தரிசனம் செய்து கொண்டு மங்களூர் (தென் கன்னடம்) போனேம். மங்களூரிலிருந்து மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில், குன்று, மலை, வனம், வனாந்தரங்க ளெல்லாம் ஜீப் காரில் வாயு வேகமாகச் சென்று அபிவிருத்தி வேலைகளைப் பார்வை யிட்டோம்.

தென் கன்னடத்தில் மலைகளும் நதிகளும் அதிகம். ஆகவே, இப்பகுதியில் ரோடுகளும் பாலங்களும் போக்கு வரவு வசதிகளுக்கு இன்றியமையாதனவா யிருக்கின்றன. மேற்படி வசதிகளுக்காக ரூபாய் பன்னிரண்டு லட்சம் ஒதுக் கப்பட்டிருக்கிறது.

இந்தப் பகுதிகளில், 'முரக்கல்லு' என்று கூறப்படும் ஒருவகைக் கல் பூமியில் ஏராளமாக வெட்டி யெடுக்கப்படு கின்றது. அது கட்டட வேலைக்குப் பெரிதும் உதவியா யிருக் கின்றது

இரண்டு மூன்று கிராமங்களில் நாங்கள் ஜீப் கார்களை விட்டு இறங்கிச் சிறு சிறு நதிகளைப் படகுகள் மூலம் கடக்கும் படியாயிற்று. நதியைத் தாண்டி முல்க்கி என்ற ஊருக்குச் சென்ருேம். முல்க்கியில் கூட்டுறவு முறையில் பால் சப்ளை சொஸைட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் பால்காரர் களிடமிருந்து பாலை வாங்கி டிக்ரி வைத்துப் பார்த்து நல்ல பாலை ஜனங்களுக்கு வழங்குகிருர்கள். இது மற்ற எந்தக் கிராமத்திலும் காணப்படாத நல்ல அபிவிருத்தி சேவை.

இது வரையில், மாதர் சங்கங்களையும், மஹிளா சமா ஜங்களையும் பார்த்துக் கொண்டு வந்த நாங்கள் தென் கன்னடக் கிராமங்களில் வனிதா சமாஜங்களைப் பார்த்தோம்.

கிராமங்களின் பெயர்களைப் பார்ப்போம். குர்ப்பூர், படகாடப் படவு, இருவயில், மூட்பித்ரி, சிறுத்தாடி, பெல்வாய், சானூர், ஹெப்ரி, முத்ராடி, தீர்த்தட்டி, முட்டாபுடி, முனியால்—மேற்கூறிய ஊர்களில் பிராணி வளர்ப்பு, கோழிப் பண்ணை, ஆஸ்பத்திரி, முடியானவர் சங்கம், உயர்தர ஆரம்பப் பள்ளி, சிறு சிறு பாலங்கள், பொது ஹால்கள் முதலியவைகளைச் சமுதாய நல அபிவிருத்தியின்கீழ் கிராம மக்களின் பூரண ஒத்துழைப்புடன் கட்டி முடித்திருக்கின்றனர்.

கர்க்கல் பகுதியில் சில கலை நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டோம். "பைலாட்ட" என்பது தென் கன்னடத்துக்கே உரிய நாட்டு நடனம். அந்த நிகழ்ச்சியில் புலியூர் பள்ளி மாணவர்கள் பங்கெடுத்துக் கொண்டு பாராட்டும் முறையில் அபாரமாக நடித்தார்கள்.

மணிபால் என்ற ஊரில் தென் கன்னடத்துக்கே பெருமை தரும் விதத்தில், கஸ்தூரிபா வைத்தியக் கல்லூரி அமைந்திருக்கிறது. முந்நூற்று நாற்பது மாணவர்கள் படிக்கின்றனர்; அவர்களுள் இருபத்துமூன்றுபேர் மாணவிகள்.

கர்க்கல் தாலூக்காவில் முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய சமுதாய நல அபிவிருத்திக் கிராமங்கள் இன்னு, ஹெஜ்மாடி, பாஜ்பே, கின்னிகோளி முதலியவை. இவற்றுள் இன்னு என்னும் கிராமம் பரிசுபெற்ற கிராமம். ஐயாயிரம் ஜனத்தொகை கொண்ட இந்தக் கிராமம் ரூபாய் ஐம்பதாயிரம் சமுதாய நல அபிவிருத்திக்காகக் கொடுத்திருக்கிறது என்று கேட்டு நாங்கள் ஆச்சரிய மடைந்தோம். முல்க்கியில் உள்ள காதி கேந்திரம் எங்களைப் பெரிதும் கவர்ந்தது, இங்கு சிறந்த முறையில் ஒரு வனிதா சமாஜம் நடைபெறுகிறது. ஹிந்தி வகுப்பு, தையல் வகுப்பு, நூற்பு முதலியவற்றுடன் முதியோர் கல்வியும் பரப்பப்படுகிறது. கெம்பால் என்னும் கிராமத்தில் ஒய். ஜி. பட் என்னும் விவசாயி விவசாயத்தில் அபாரமாகச் சாதித்திருக்கிறார். அவரை அங்கு எல்லோரும் 'கிருஷி ரிஷி' என்று அழைக்கின்றனர்.

மங்களூரில், சுகாதார மந்திரி ஸ்ரீ ஏ. பி. ஷெட்டி அவர்கள் பத்திரிகையாளர்களுக்குப் பிரமாதமான ஒரு விருந்து வைத்தார்.

காலையில், தென் கன்னடத்தின் பிரசித்தி பெற்ற வக்கீலான ஸ்ரீ வைகுண்ட பாளிகா, எம். எம். ஏ., அவர்களின் இல்லத்தில் சிற்றுண்டி உண்டு, மங்களூரிலிருந்து விடை பெற்றுக் கொண்டோம்.

வழி நெடுக ஜீப்கார் பிரயாணத்தில் நாங்கள் உட்கொண்ட மண் புழுதி கண்டம் வரையில் நிறைந்து எங்கள் சாரீர வளத்தைப் பெரிதும் பாதித்து விட்டது. எல்லோரும் கரகரப்ரியா பாடினோம். அதாவது கரகரத்த குரலில் பேசினோம்! எங்கள் தொண்டைகளைச் சரிப்படுத்திக் கொள்ளுவதற்கு வழிப் பிரயாணத்தில் ஏராளமான வாய்ப்புகள் கிடைத்தன. நாங்கள் விஜயம் செய்த ஊர்களிலெல்லாம், எங்களுக்கு இளநீர், பானகம், நீர்மோர், காப்பி, எலுமிச்சம் பழரஸம் இப்படிப் பலவிதமான பான வகைகள் கிடைத்தன. அவற்றை யெல்லாம் ஒருவாறு தீர்த்துக் கட்டியதில் தொண்டையில் தங்கியிருந்த மண் புழுதி பத்திரமாக வயிற்றுக்குள் போய் விட்டது. எங்கள் உடைகளைப் பற்றியிருந்த மண்ணுசையை உதற எங்களுக்குச் சர்க்கார் உதவி கிடைத்தது. பாலக்காட்டில் ஒரு தடவையும், மங்களூரில் ஒரு தடவையும் எங்களை வெளுத்து வாங்கி விட்டார்கள்! ஆமாம், எங்களுடைய உடைகளையெல்லாம் சலவை செய்து கொடுத்ததைத்தான் குறிப்பிடுகிறேன்!

சுதந்திர பாரதத்தைச் சுபிட்சப் பாதையில் செலுத்தும் அபிவிருத்தித் திட்டங்களில் மக்கள் ஒத்துழைக்க வேண்டியது அவர்கள் கடமை.

("சுபிட்சப் பாதையில்"—கல்கி—4-3-56, 11-3-56.)

* * * * * *

சென்னை ராஜ்யத்தின் 290 லட்சம் கிராம மக்களில் 83 லட்சம் பேர்கள் இன்று புத்துயிர் பெற்று பொலிவுற்று விளங்குகின்றனர். முதல் ஐந்தாண்டு திட்டத்தை உருவாக்கியவர்கள் மிகுந்த துணிச்சலுடனும் தூரதிருஷ்டியுடனும் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தைச் சிருஷ்டித்தனர். இந்த 83 லட்சம் பேர்களுக்கும் இத்திட்டங்களின் பயன்களை முதன் முதலாகப் பெறும் அதிர்ஷ்டம் கிட்டியது.

நமது கிராம மக்களில் பெரும்பான்மையோர் பழமையில் ஊறியவர்கள். புதிய கருத்துக்கள் சிறந்தவையாக இருந்தாலும் ஏற்கத் தயங்குவார்கள். ஆனால் அனுபவத்தின் பேரில் பலாபலன்களைக் கண்டால் சந்தோஷமாகப் பின்பற்றுவார்கள். 1952-ம் ஆண்டில் சமுதாய நலத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, ஜீப் கார்களில் அங்குமிங்கும் போய்க்கொண்டிருந்த அதிகாரிகளைப் பார்த்த கிராம மக்கள், "இவர்களுக்கு இது தவிர வேறு வேலை இல்லையோ?" என்று அருவருப்புக்கொண்டனர். ஆனால், கடந்த மூன்றரை வருஷங்களில் இதே அதிகாரிகளின் உதவியைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் சாதித்துள்ள சாதனை பிரமிக்கத்தக்கது. ஆர்ப்பாட்டமற்ற அற்புதப் புரட்சி என்றே கூறலாம். இந்தச் சாதனைகளைச் சில குறிப்பிட்ட பகுதிகளில் நேரில் காணும் வாய்ப்பு பத்திரிகையாளர் கோஷ்டியொன்றுக்குக் கிடைத்தது. "சுதேசமித்திரன்" பிரதிநிதி உட்பட பத்து பத்திரிகை நிருபர்கள் இப்பகுதிகளைச் சுற்றிப் பார்த்தனர். சமுதாய நல இலாகா பொது உறவு அதிகாரி ஸ்ரீ எஸ். வெங்கடசாமியும் உடனிருந்து உதவினார்.

கோயமுத்தூர், மலபார், தென் கன்னடம் ஜில்லாக்களில் சமுதாய நலத் திட்டங்கள் அமுலிலுள்ள சில பகுதிகளைப் பத்திரிகையாளர் பார்வையிட்டனர். இதற்காக சுமார் இரண்டாயிரம் மைல்கள்வரை சுற்றுப் பிரயாணம் செய்ய நேர்ந்தது. இந்த மூன்று ஜில்லாக்கள் ஒவ்வொன்றிலும் கிராம மக்கள் பிரச்னைகள் அலாதியானவை. கோவை ஜில்லாவில் குடியிருப்பு வசதி, சாலைகள் அமைப்பு, புதிய பள்ளிக்கூடங்கள் அமைப்பது, பழைய பள்ளிக்கூடங்களை

விஸ்தரிப்பது முதலியன முக்கியமானதாக இருக்கின்றன. மலபார் ஜில்லாவில் மின்சார சாதன விஸ்தரிப்புத் திட்டங்கள் முக்கியமானவை. பெரும்பாலும் மலைகளாயும், காடுகளாயும் உள்ள தென் கன்னடம் ஜில்லாவில் சாலைகள் அமைப்பதற்கும், பாலங்கள் கட்டுவதற்கும் மற்ற எல்லா வற்றையும்விட முதலிடம் தரப்பட்டிருக்கிறது. சமுதாய நலத்திட்டம், சமுதாய அபிவிருத்தித் திட்டம், தேசிய வளர்ச்சித்திட்டம், ஸ்தல அபிவிருத்தித் திட்டம் என்று நான்கு விதமான திட்டங்கள் இப்பகுதிகளில் அமுலில் இருக்கின்றன. இத்திட்டங்களைப் பயன்படுத்திக்கொண்டு மேலே குறிப்பிட்ட முக்கிய வேலைகள் தவிர, விவசாயம், கால்நடை வளர்ச்சி, சுகாதார அபிவிருத்தி, பிரசவ விடுதிகள் திறப்பது, மாதர் சங்கங்கள் அமைப்பது, சிறு கைத் தொழில்கள் வளர்ச்சி, கலை அபிவிருத்தி, குழந்தைகள் விளையாட்டுக்கு வசதி முதலிய மேலும் பல வகைகளில் பொது மக்களே முன்வந்து தங்களது உழைப்பையும் பணத்தையும் கொடுத்து சர்க்கார் கொடுக்கும் உதவியையும் பெற்று தங்கள் வாழ்வு மேன்மையுறத்தக்க பணிகளைச் செய்துள்ளனர். உழைப்பின் மூலமும், ரொக்கமாகவும் பொதுமக்கள் என்ன கொடுக்க முன்வருகின்றனரோ அதைப்போல் சாதாரணமாகச் சம பங்கு உதவி செய்கின்றனர், சமுதாய நலத் திட்டங்களை அமுல் நடத்தும் சர்க்கார்.

கீழ் பவானி திட்டம்

கோயமுத்தூர் ஜில்லாவில் கீழ் பவானி பிராந்திய மக்கள் சிறந்த அதிருஷ்டசாலிகள். அவர்களுக்குக் கீழ் பவானி அணைக்கட்டின் வசதி கிடைத்ததோடு சமுதாய நலத்திட்டமும் சேர்ந்து கிடைத்தது. கீழ் பவானி திட்டத்தின் நன்மை கிடைத்தபோதிலும், அதனால் பல பகுதிகளில் கஷ்டமும் எற்பட்டிருக்கிறது. கோவை ஜில்லாவின் இப்பகுதியைச் சேர்ந்த சட்டசபைப் பிரதிநிதிகள் அடிக்கடி பவானி கால்வாய் கசிவுநீர் காரணமாக எற்பட்டுள்ள நஷ்டத்தைப்பற்றி சட்டசபைகளில் அடிக்கடி பேசுகினறனர். இப்பொழுது இந்தக் கஷ்டத்தை நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. "கசிவு நீர்" என்று இதைக் குறிப்பிடுவது முற்றிலும் பொருத்தமற்றது. அதற்குப் பதிலாக ஊற்றுப் பெருக்கெடுத்து ஆங்காங்கு பற்பலவிடங்களில் ஓடும் சிறு ஆறுகள் என்றே கூற வேண்டும். இதனால் அருகாமையிலுள்ள மண் வீடுகள், குடிசைகள் உட்கார்ந்துவிட்டன. இந்த துரதிருஷ்டத்தையே சிறந்ததோர் அதிருஷ்டமாக சமுதாய நலத் திட்டம் மாற்றி அமைத்தது. ஊற்றுப் பெருக்கால் பாதிக்கப்பட்ட "ஏழைக்குடும்பங்கள்" மட்டும் 1,438. ஒவ்வொரு குடும்பத்திற்கும் சர்க்கார் ரூ. 100 வரை மானியம் கொடுத்தனர். வேறு இடங்களில் வீடுகள் கட்டுவதற்கு நிலமும் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. ஆவாரங்காட்டூர், நல்லகௌண்டன்வலசு,



புது ஹரிஜன காலனி உருவாகிறது.

நஞ்சப்பன்பாளையம், வேமந்தபாளையம், ஷெண்பகப்புதூர், மாரனூர் முதலிய பலவிடங்களில் காலனிகள் தோன்றியுள்ளன.

கால்நடை விருத்தி

கால்நடைச் செல்வத்தில் தனிப்பெருமை பெற்று விளங்கிவரும் பழையகோட்டை பட்டகார் கால்நடைப் பண்ணைக்கு விஜயம் செய்ததன் மூலம் பத்திரிகையாளருக்கு ஏற்பட்ட சந்தோஷம் அளவற்றது. தலைமுறை தலைமுறையாகச் சிறந்த முறையில் நடைபெற்றுவரும் இப் பண்ணைக்குக் கால்நடை அபிவிருத்தியில் அக்கறையும் ஆர்வமும் கொண்டவர்கள் இந்தியாவிலிருந்தும் உலகின் இதர நாடுகளிலிருந்தும் விஜயம் செய்கின்றனர்.

பழையகோட்டை பட்டகார் இப்பொழுது மற்றொரு துறையில் சிறந்ததோர் சேவையில் ஈடுபட்டுப் பெயரும் புகழும் பெற்றுவருகிறார். மேலப்பாளையம் காலனியை இவர் நிர்மாணித்து வருகிறார். இங்கு 55 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் இரண்டு விதம். ஒன்று 20 அடிக்கு 12 அடியுள்ள இரு அறைகள், ஒரு ஹால். மற்றொன்று 24 அடிக்கு 12 அடியுள்ள இரு ஹால்கள், 20 அடிக்கு 12 அடியுள்ள இரு அறைகள். முதல் மாதிரி வீட்டின் கிரயம் ரூ. 1,500. இரண்டாவது மாதிரி வீட்டின் கிரயம் ரூ. 2,000. காலனிக்கான 12 ஏக்கர் நிலத்தைப் பட்டகார் இனாமாகக் கொடுத்திருக்கிறார். ஊற்றுப் பெருக்கால் பாதிக்கப்பட்ட 55 குடும்பங்கள் இங்கு குடியேறியுள்ளனர். இவர்களனைவரும் ஜாதி ஹிந்துக்கள். குடி நீர் சப்ளை, சாக்கடை வசதி, பள்ளிக்கூடம் முதலியவற்றிற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தக் காலனி அமைப்பில் சமுதாய நலத் திட்டத்தையும் மக்கள் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

ஹரிஜனங்களுக்கு வீடுகள்

கோவை ஜில்லா சமுதாய நலத்திட்டப் பிரதேசத்தில் ஹரிஜனங்களுக்காகக் கட்டப்பட்டுள்ள வீடுகளும் அமைக்கப்பட்டுள்ள காலனிகளும் ஹரிஜனங்களுக்கு ஒன்றும் செய்யப்படவில்லை என்று குறை சொல்லுவோருக்குச் சிறந்த பதிலாகும். ஊற்றுப் பெருக்கு உபத்திரவம் காரணமாக ஹரிஜனங்களுக்கு நற்காலம் ஏற்பட்டதாகவே சொல்லலாம். ரூ. 250 முதல் ரூ. 750 வரை மதிப்புள்ள வீடுகள் 25 கிராமங்களில் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமத்திலும் பத்து முதல் ஐம்பது வரை வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஹரிஜனங்கள் மிகச் சொற்பமான தொகையையும், உழைப்பையும் கொடுத்துள்ளனர். சில வருஷங்களில் ஹரிஜனங்கள் வீட்டுக்குச் சொந்தக்காரர்களாகி விடுகின்றனர். புதிய காலனிகள் பெரும்பாலும் ஜாதி ஹிந்துக்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையில் உள்ளன. இரு சாராரும் கலந்து வசிக்கும் காலனிகள் இல்லை. இவற்றை இரு தரப்பினரும் விரும்பவில்லை என்பது அவர்களுடன் பேசியதிலிருந்து தெரியவந்தது. இரண்டு மூன்று காலனிகளில் ஆங்காங்கு குடிப் பழக்கம் மட்டும் காணப்படுகிறது. இதெல்லாம் மதுவிலக்கு அமுலிலுள்ள பிரதேசம்.

கோவைப் பிரதேசத்தில் புகையிலை, கரும்பு, மஞ்சள், பருத்தி சாகுபடி மிக முக்கியமானது. நெல் சாகுபடியிலிருந்து கிடைக்கும் வருமானத்தைவிட மூன்று முதல் ஐந்து பங்கு வரை அதிக வருமானம் வருகிறது. நெல் சாகுபடியில் அசெம்பிளி அங்கத்தினர் ஸ்ரீ பி. ஜி. கருத்திருமன் ஜப்பானிய முறையைக் கையாண்டுவருகிறார். இந்த முறை காரணமாக ஏக்கருக்கு ரூ. 250 நிகர வருமானம் கிடைக்கிறது. இந்தப் பயிர்கள் சாகுபடி அபிவிருத்தியில் விவசாயிகளுக்கு விவசாய இலாகா நல்ல உதவி செய்கிறது.

குடிநீர் வசதி

சமுதாய நலத் திட்டம் காரணமாகவே சென்னிமலை (பெட்ஷீட் போன்ற விரிப்புகள் உற்பத்திக்குப் பெயர் பெற்றது) பஞ்சாயத்திற்குக் குடி நீர் வசதி கிடைத்தது. சென்னிமலைமீது வீற்றிருக்கும் வேலவனைத் தரிசிக்க ஏராளமான யாத்ரீகர்கள் ஒவ்வொரு நாளும் வருகின்றனர். தைப்பூசத்தன்று யாத்ரீகர் தொகை கணக்கில் அடங்காது. பஞ்சாயத்தின் ஜனத் தொகையே பத்தாயிரம். குடி நீர் கஷ்டத்தால் மக்கள் தவித்தது கொஞ்சநஞ்சமல்ல. ரூ. 74,000 செலவில் குடி நீர்த் திட்டம் தயாரிக்கப்பட்டது. சமுதாய நல இலாகா ரூ. 49,000 கொடுத்து உதவியது. பாக்கியை கோவை ஜில்லா போர்டு சில விதிகளுக்குட்பட்டு பஞ்சாயத்துக்குக் கொடுத்திருக்கிறது. சென்ற செப்டெம்பர் மாதம்தான் குடி நீர் சப்ளை திட்டக் கால்கோள் விழா நடந்தது. நான்கு மாத காலத்தில் திட்டம் முடிந்தது. சென்ற தைப்பூச விழாவிற்கு வந்த பல்லாயிரக் கணக்கான யாத்ரீகர்கள் உள்ளம் குளிர்ந்து மகிழ்ந்தனர்.

ஹரிஜனங்களைத் தீண்டக்கூடாது, பார்க்கலாகாது என்று ஒரு காலத்தில் மதித்துவந்த மலபார் பிராம்மணர்களான நம்பூத்ரிகள் இன்று அதை எல்லாம் புறக்கணித்து ஹரிஜனங்களுடன் சமமாகப் பழகுவதைக் காண மிகவும் சந்தோஷமாக இருந்தது. பாலக்காடு தாலுகாவில் பெருங்கோட்டுகுரிசி என்ற இடத்தில் ஹரிஜன காலனி ஒன்றுக்கு அஸ்திவாரமிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீ நாராயண நம்பூத்ரிபாட் என்பவர் காலனிக்கான நிலத்தை இனாமாகக் கொடுத்திருக்கிறார். பத்திரிகைக் கோஷ்டியினர் இவ்விடத்திற்கு விஜயம் செய்தபோது ஸ்ரீ நம்பூத்ரிபாட் வந்திருந்து காலனி பற்றிய விவரங்களை எல்லாம் தெரிவித்தார்.

மலபாரில் நாயாடிகள் என்பவர்கள் பார்க்கவும் கூடாத ஹரிஜனங்களாம். இவர்களைச் சேர்ந்த சுமார் 20 குடும்பங்களுக்கு ஒலவக்கோடு அருகில் ஒரு காலனி அமைக்கப்பட்டிருக்கிறது. வீடுகள் மிகச் சிறியவை. கோவை ஜில்லாவில் கண்ட ஹரிஜன் காலனி வீடுகளையும் இந்த வீடுகளையும் பார்க்கும்போது நாயாடி காலனி வீடு கிரயம் மிக அதிகமாகவே தோன்றியது. பத்திரிகையாளர் கோஷ்டியினர் இதை எடுத்துக் கூறினர். வீடுகள்கூட திருப்திகரமான முறையில்

அமையவில்லை. மழை பெய்தால் வீட்டுக் கூரை இருப்பதாகவே தெரியவில்லை என்று காலனிவாசிகள் புகார் சொன்னார்கள்.

மலபார் ஜில்லாவில், சமுதாய நலத் திட்டப் பிரதேசத்திலுள்ள கிராமங்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மின்சார வசதி கொடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மற்ற கிராமங்களுக்கும் இந்த வசதி கிடைக்க வேண்டுமென்று அதிகாரிகள் முயன்று வருகின்றனர். திட்டங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

கல்வி அபிவிருத்தி

சமுதாய நலத் திட்ட ஆதரவில் கல்வி அபிவிருத்திக்காக ஒன்றரை லட்சம் ரூபாய் வரை செலவழிக்கப்பட்டிருக்கிறது. 66 பள்ளிக்கூடங்களுக்கு கட்டிட விஸ்தரிப்புக்காகப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முறையில்தான் கொல்லங்கோடு ராஜா நிர்வகித்துவரும் ஹைஸ்கூலுக்கு கட்டிட விஸ்தரிப்பிற்காக ரூ. 10,000 மான்யம் தரப்பட்டிருக்கிறது. பத்திரிகையாளர் கொல்லங்கோடு சென்றபோது, இதற்கான அஸ்திவாரமிட்டார் ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் ஸ்ரீ பி. வி. மாணிக்கம். இந்த ஹைஸ்கூலை காலேஜாக மாற்ற கொல்லங்கோடு ராஜா எண்ணம் கொண்டிருக்கிறார். இந்த ஹைஸ்கூலில் கலை அபிவிருத்தி உப பாடமாக இருக்கிறது. இந்தப் படிப்பில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் பத்திரிகையாளர் விஜயத்தை முன்னிட்டு "கிராதார்ஜுனீயம்" என்ற காவியத்தை கதகளியாக நடித்தனர்.

மலம்புழா திட்டம்

மலம்புழா திட்டம் காரணமாக மலபார் ஜில்லாவில் விவசாய அபிவிருத்தி கணிசமாக இருக்கிறது. கால்நடை அபிவிருத்தியிலும் சிறிதளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. பாதுகாப்பான குடி நீர்த் திட்டங்களும், கிணறுகள் வெட்டுவதும் கவனிக்கப்பட்டுள்ளன. ரூ. 3,84,490 செலவில் 32 பாலங்களுக்கு அனுமதி தரப்பட்டிருக்கின்றது. மலிவான விலையில் சர்க்கா விற்கப்பட்டிருப்பதும், வார்தா செக்கு ஆடுவதும் தவிர கிராமத் தொழில் வளர்ச்சியில் இதுவரை ஒன்றும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. சில திட்டங்கள் தயாராவதாக மட்டும் அறிவிக்கப்பட்டது.

பொதுவாகப் பார்க்கும்போது இந்த ஜில்லாவில் சமுதாய நலத் திட்டங்களுக்குப் பொது மக்களின் விசேஷ ஒத்துழைப்பு இல்லை. இது கிடைத்தாலொழிய, கணிசமான பலன் எதிர்பார்க்க முடியாது.

மக்கள் அளிக்கும் அமோக ஆதரவு

தென் கன்னடம் ஜில்லா காடுகள், மலைகள், நதிகள் அதிகமாகவுள்ளது. முன் கூறியபடி ரோடுகள் அமைப்பது, பாலங்கள் கட்டுவது இவையே இந்த ஜில்லாவில் முக்கியமான வேலை. இதற்காக ரூ. 12 லட்சம் வரை ஒதுக்கப்பட்டிருக்கிறது. பல வேலைகள் நடந்து விட்டன. இன்னும்

கீழக்கன்சேரியில் ஹரிஜன காலனியை அடிஷனல் அபிவிருத்தி கமிஷனர் ஸ்ரீ என். இ. எஸ். ராகவாசாரி திறந்து வைத்தார்.

பல நடந்து வருகின்றன. மே மாதம் இப்பகுதியில் நல்ல மழை ஆரம்பித்து விடும். அதற்குள் இந்த வேலைகள் முடியவேண்டும். சமுதாய நல இலாகா செலவு செய்ய உத்தேசித்துள்ளதற்குப் பொது மக்கள் தங்கள் உழைப்பு, பொருள்கள், ரொக்கம் மூலம் இதுவரை எட்டே முக்கால் லட்சம் ரூபாய் கொடுத்திருக்கின்றனர். பொதுஜன ஆதரவுக்கு சிறந்த உதாரணம் இது. இவ்விதம் பொதுமக்கள் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள சில திட்டங்கள் இரும்பு, எஃகு முதலியவை கிடைக்காமல் தடைப்படுகின்றன. ஹெர்மூண்டே பாலம் இதற்கு உதாரணம். இந்தப் பெயர்கொண்ட நதியில் வருஷத்தில் ஐந்து மாதங்கள் வெள்ளம் போகிறது. நதிக்கு அப்பால் மலைப் பிரதேச கிராமங்களில் 3,000 மலைஜாதிக் குடும்பங்கள் வசிக்கின்றன. இந்த ஐந்து மாதங்களும் மலைஜாதியினர் வெளி உலகுடன் தொடர்பின்றி மலையிலேயே வசிக்கின்றனர். அவசியமான பொருள்களைச் சேமித்துவைத்துக்கொண்ட போதிலும், பல சமயங்களில் கஷ்டப்படுகின்றனர். இவர்கள் நலத்திற்காகவே பாலம் கட்ட உத்தேசிக்கப்பட்டது. வேலை பாதியில் இருக்கிறது. பாலத்திற்கு இருபுறமும் இணைப்பாக ஆறு மைலுக்கு ரோடுகள் போட்டுள்ளனர், மலைவாசிகள். வேலை துரிதமாக முடிய வழிகாண வேண்டும்.

தென் கன்னடம் ஜில்லாவில் மக்கள் ஒத்துழைப்பைப் பரிபூர்ணமாக உபயோகித்துக்கொண்டுள்ளனர் அதிகாரிகள். இதன் காரணமாகவே சில இடங்களில் சமுதாய நல இலாகா உதவி செலவில் பாதிக்கும் குறைவாக இருக்கிறது. மங்களூரிலிருந்து கார்கல் போகும் வழியில் குர்ப்பூர்-போலாலி ரோடு ஒன்றை மலைமீது அமைத்துள்ளனர் கிராமவாசிகள். போலாலி என்றவிடத்தில் துர்கை கோவில் ஒன்று இருக்கிறது. யாத்ரீகர்களுக்கு உதவியாக இந்த ரோடு போடப்பட்டிருக்கிறது. இவற்றிற்கெல்லாம் சமுதாய நலத் திட்டத்திலிருந்தும் ஓரளவு உதவி தரப் பட்டிருக்கிறது.

மூட்பித்ரி என்ற இடத்தில் ரூ. 18,000 செலவில் மக்களின் உபயோகத்திற்காக சமுதாய ஹால் ஒன்று கட்டப் பட்டிருக்கிறது. இதற்கு சமுதாய நல இலாகா ரூ. 2,500 தான் உதவியிருக்கிறது. வருஷந்தோறும் நவராத்திரியின்போது இங்கு கலை விழா ஒன்று நடக்கிறதாம். அதைச் சரிவர நடத்த இடவசதிக்காகவே பொதுமக்கள் முன்வந்து பணம் உதவினர். ஹால் கட்டப்பட்டுவிட்டது. இங்கு, இனி திருமணங்கள், கூட்டங்கள் முதலியனவும் நடத்தலாம் என்று கூறப்பட்டது.

குறைந்த செலவில் கட்டிடங்கள்

உடுப்பிக்குச் சமீபமுள்ள மணிபாலில் ஸ்தல அபிவிருத்தி வேலைகளுக்குப் பெரும் ஆதரவு இருக்கிறது. அசெம்பிளி அங்கத்தினர் ஸ்ரீ அனந்தபாய், அவரது மனைவி இருவரும் அபிவிருத்தி வேலைகளில் மக்களை ஈடுபடுத்தியுள்ளனர். குறைந்த செலவில் கட்டிடங்களைக் கட்டுவதில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. மணிபால் கஸ்தூர்பா மெடிகல் காலேஜையும் பத்திரிகை நிருபர்கள் பார்த்தனர். டாக்டர் டி. மாதவ பாய் பல பகுதிகளையும் சுற்றிக் காண்பித்தார்.

தென் கன்னடம் ஜில்லாவில் சமுதாய நலப் பிரதேசத்தில் விதை, உரம் வாங்குவதற்கு ரூ. 32 லட்சம் வரை விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராமாந்திர ஜாகை வசதிக்காக ரூ. 50,000 செலவழிக்கவும் உத்தேசம் இருக்கிறது. புதிய பள்ளிக்கூடங்களுக்காகவும், பழைய பள்ளிக்கூடங்கள் விஸ்தரிப்புக்காகவும் ரூ. 1,14,820 செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதில் சமுதாய நல இலாகா உதவி ரூ. 32,625 தான். பாக்கி மக்கள் உதவியதாகும்.

திட்டங்கள் மூலம் நற்பலன்கள்

சமுதாய நலத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட முதல் வருஷத்தில் செய்யப்பட்ட அபிவிருத்தி வேலைகள் மிகக்குறைவு. இத்திட்டத்தை புரிந்துகொண்டு இதன் மூலம் நற்பலன் அடையலாம் என்று மக்களுக்கு நம்பிக்கை ஏற்படச் செய்வதிலும், அவர்களுக்கு உற்சாகத்தை உண்டுபண்ணுவதிலும் முதல் ஆண்டு கிட்டத்தட்டக் கழிந்துவிட்டது. இரண்டாவது மூன்றுவது ஆண்டுகளில்தான் திட்டத்தின் பலனை மக்கள் கண்ணாரக் கண்டனர். ஒரு கிராமம் பயனடைந்ததைக் கண்ட மற்றொரு கிராம ஜனங்கள் தாங்களும் முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டுமென்று அவாக்கொண்டு முன்வந்தனர். இத்தகைய முறையில் கிராம மக்கள் இப்பொழுது போட்டி போட்டுக்கொண்டு பல அபிவிருத்தித் திட்டங்களைக் கோருகின்றனர். ஆனால் போதிய நிதி வசதியின்றிப் பல திட்டங்களை ஏற்க முடியாதிருக்கின்றனர் அதிகாரிகள். இந்த நிலைமையில் இவ்வருஷ இறுதியில் சமுதாய நலத் திட்டம் முடியுமென்றும், தேசீய அபிவிருத்தித் திட்டங்களும், ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களும் நீடிக்குமென்றும் கூறப்படுகிறது. இறுதி முடிவு யாதாயினும் மக்களின் கரைபுரண்ட உற்சாகம் குன்றுமல் அதை நன்கு பயன்படுத்திக்கொள்ளும் திட்டம் வகுக்கப்பட்டு அமுல் நடத்தப்பட வேண்டும். இத்திட்டங்களுக்காக மக்கள் செய்யும் உதவியும் ஒருவித வரிதான். ஆனால் மற்ற வரிகளைப் போலல்ல; மனமுவந்து சந்தோஷத்துடன் கொடுப்பதாகும். தவிர, கொடுக்கும் உதவியின் பலனை அவர்கள் நேரில் காண்கின்றனர். சர்க்கார் எவ்வளவுதான் வரி போட்டு அபிவிருத்தி வேலைகளைச் செய்தாலும் ஒரு பங்குத் தொகைக்கு இரு பங்கு வேலை நடக்காது. சாதாரணமாக சர்க்கார் ஒரு லட்சம் ரூபாய் செலவழிப்பதாக இருந்தால் சமுதாய நலத் திட்டத்தில் மக்கள் உதவி செய்யும் தொகையான ஒரு லட்சத்தையும் சேர்த்து இரண்டு லட்சமாகிறது. சாதாரணமாக சர்க்கார் செலவினத் திட்டங்கள் இந்த முறையில் அமைவதற்கில்லை. சர்க்கார் திட்டங்களால் இதுவரை காணமுடியாத சிறந்த பலன்கள், சமுதாய நலத் திட்டங்களிலுள்ள கிராமங்களுக்குக் கிடைத்துள்ளன. மற்ற கிராமங்களும் இத்தகைய பலன்களை அடைய வாய்ப்பளிப்பது கடமையாகும். கிராமமே இந்தியா; கிராமம் செழித்து பொலிவுற்று விளங்கினுல் இந்தியாவும் செழித்துக் கொழிக்கும்.

—சுதேசமித்திரன் 19-2-1956]

CONNEMARA PUBLIC LIBRARY 28 MAY 1956 MADRAS

1956-ல் வேலை பூர்த்தியாகிற சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள்

1952 அக்டோபரில் முதல் தடவையாக சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது மேற் கொள்ளப்பட்ட வட்டாரங்களில் நடத்தப்பட்டு வந்த தீவிர வேலைத்திட்டம் இவ்வருஷத்தில் பூர்த்தியடைந்து விடும். இவ்வாறு தீவிர வேலைத்திட்டம் பூர்த்தியாகிற தொகுதி களில் பிறகு சாதாரண முறையில் அபிவிருத்தி வேலைகள் நடத்தப்பட்டுவரும். அவை தேசிய வளர்ச்சித் திட்டத்தைச் சேர்ந்த வட்டாரங்களாக மாறிவிடும். இந்த மாறுதலை விளக்கி சமுதாய அபிவிருத்தித் திட்ட நிர்வாக ஸ்தாபனம் ராஜ்ய அரசாங்கங்களுக்கு சமீபத்தில் தகவல் அனுப்பியிருக் கிறது.

இவ்வருஷத்தில் தீவிர வேலை பூர்த்தியாகிற வட்டாரங் களில் 25,264 கிராமங்கள் இருக்கின்றன; 164 லட்சம் மக்கள் அங்கே வாழ்கிறார்கள். மூன்று வருஷ காலத்துக் குத் தீவிர வேலை நடக்கவேண்டுமென்பதுதான் ஆரம்பத்தில் வகுக்கப்பட்ட கொள்கை. அதுதான் எந்தத் தீவிரத் திட்டத்துக்குமுள்ள உச்சகால அளவு. முதலில் இதற்குவேண்டிய தொழில் நுட்ப ஊழியர்கள் பற்றாக் குறையாக இருந்தபடியாலும், பூர்வாங்க வேலையினால் சுணக்கம் ஏற்பட்டபடியாலும் 1956 செப்டம்பர் வரை யில் (ஒரு வருஷத்துக்கு) அவைகளின் கால அளவு நீடிக்கும்படி செய்யப்பட்டது.

இது சம்பந்தமாய் ஒதுக்கப்பட்ட "கடன்கள்", "மானியங்கள்" முதலிய பணத் தொகை சீக்கிரமே பூர்த்தியாக உபயோகிக்கப்பட்டுவிட்டால் திட்டங்களைச் சீக்கிர மாக முடிவுக்குக்கொண்டு வரலாமென்றும் தெரிவிக்கப் பட்டது. செப்டம்பர் 30உ-க்குள் அவ்வாறு பூர்த்தியாக உபயோகிக்கமுடியாவிட்டால் 1957 மார்ச் 31உ வரை அவைகளை நீடிக்கலாம்.

தீவிர வேலை பூர்த்தியடைந்து விட்டபடியால் அவ் வட்டாரங்களை அரசினர் கவனிக்காமல் இருந்துவிட மாட்டார்கள். கிராம அபிவிருத்திக்கான நிரந்தர ஏற்பாடாகிவிட்ட தேசிய வளர்ச்சித் திட்டத்தில் அவை ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டு அதற்குரிய முறையில் அரசினரின் உதவியை அவை பெற்றுவிடும்.

தேசிய வளர்ச்சித் திட்டமான நிரந்தர ஏற்பாட்டின் பிரகாரம் இவ் வட்டாரங்களில் பின்கண்ட அளவுப்படி ஊழியர்கள் இருப்பார்கள் :—

வட்டார அபிவிருத்தி அதிகாரி (சப்-டிவிஷனல் அதிகாரிக்கு உதவி புரிவதற்கு)	1
வளர்ச்சித் திட்ட அதிகாரிகள் (விவசாயம், கால்நடை பராமரிப்பு, கூட்டுறவு, பஞ்சாயத்து).	3
சமூகக் கல்வி அமைப்பாளர்கள் (ஒரு பெண், ஒரு ஆண்)	2
பொது சுகாதாரத்தில் விசேஷ பொறுப்புள்ள ஓவர்சீயர்கள்	1
கிராம சேவக்குகள்	10
அக்கௌண்டன்ட்-ஸ்டோர்கீப்பர்	1
டைப்பிஸ்ட்-கிளார்க்	1
4-வது ரக ஊழியர்	3

(சுமார் 100 கிராமங்கள் உள்ள ஒரு வட்டாரத்தில் இவ் வளவு பேர்களும் இருப்பார்கள்.)

ஏற்கெனவே இவ்வாறு தீவிர வேலைத் திட்டங்களை நடத்தியதன் மூலம் தீவிர முறையில் இதர அபிவிருத்தி ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஏற்றவையாகவும், ஸ்தல பொதுஜன ஸ்தாபனங்களை உருவாக்கியிருப்பவையுமான இடங்களில் இதர இலாகாக்களின் அபிவிருத்தி வேலைகள் தீவிரமாய் நடத்தப்படலாம். உணவுற்பத்திப் பெருக்க இயக்கம், விவசாயத் திட்டங்கள், கால்நடை வளர்ப்பு, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து வசதி, குடிசைத் தொழில்-சிறு தொழில் அபிவிருத்தி முதலியவை சம்பந்தமான திட்டங்களை அங்கே மேற்கொள்ளலாம்.

மக்களின் பங்கும் நீடிக்கவேண்டும்

சர்க்காரைப் போலவே மக்களும் இத்தொகுதிகளின் எதிர் கால அபிவிருத்தியில் முன்போல் பங்கெடுத்துவரவேண்டு மென்பது விளக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இதுவரையில் செய்துள்ள சேவையும், அளித்துள்ள உதவியும் கணிசமாக இருக்கின்றன. 1955 செப்டம்பர் 30உ வரை சர்க்கார் 19·9 கோடி ரூபாய் இத்தொகுதிகளுக்காகச் செலவிட்டிருக்கிறார் கள்; மக்கள் உழைப்பு, பணவுதவி, தொழில் சேவை முதலியவைகளின் மதிப்பு 7·78 கோடி ரூபாய். அதாவது 1,000 பேருக்கு 4,680 ரூபாய். இதர எந்தத் திட்டத்திலும் இதற்கு அதிகமாக அவர்களின் பங்கு ஏற்பட்டிருக்கவில்லை. தேசிய வளர்ச்சித் திட்டங்கள், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவை எல்லாம் சேர்த்தால் சராசரியாக 1,000 பேருக்கு 2,828 ரூபாய் வீதம் தரப்பட்டிருக்கிறது என்று கூறலாம். எனவே, 1952-53 சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் விஷயத்தில், மக்களின் பங்கு மொத்த சராசரி யைப்போல் இரு மடங்காகும்.

நேரடிப் பலன் மதிப்பு

இந்த சமுதாய அபிவிருத்தித் திட்டத் தொகுதிகளில் வாஸ்தவமாக ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளை 1,000 பேருக்கு இவ்வளவு என்று கணித்துக் கூறுவதானால், முக்கியமான பல அம்சங்களில் அவை பின்கண்டபடி இருக்கும் :—

பிரதான நடவடிக்கைகள்	(1,000 பேருக்கு)
விதை வினியோகம்	83·82 மணங்கு
ரசாயன உர வினியோகம்	224·95 மணங்கு
நடத்தப்பட்ட நிதர்சன விவசாயக் காட்சிகள்.	32·4 (எண்ணிக்கை)
பழ சாகுபடிக்குக்கொண்டு வந்த பிரதேசம்.	2·31 ஏக்கர்
காய்கறி சாகுபடிக்குக் கொண்டு வந்த பிரதேசம்.	6·91 ,,
உயர் ஜாதி காளைகள் வினியோகம்	0·15 (எண்)
உயர் ஜாதி பறவைகள் வினியோகம்.	4·67 (,,)
பாசனத்துக்குக் கொண்டுவரப் பட்ட அதிகப்படிப் பிரதேசம்.	53·24 ஏக்கர்
மீட்கப்பட்ட நிலம்	21·19 ,,
குடி தண்ணீர் கிணறு (அமைக்கப் பட்டவை)	0·67 (,,)
(புதுப்பிக்கப்பட்டவை)	1·11 (,,)
சாக்கடைக் கால் (அமைக்கப் பட்டவை).	82·73 கஜம்
சந்துகள் (அமைக்கப்பட்டவை)	2·06 கஜம்

இந்த அபிவிருத்திகள் எல்லாம் பெரும்பாலும் மக்களின் முயற்சியால் சர்க்காரின் உதவிகொண்டு நடத்தப் பட்டவை. மக்களின் ஊக்கமும் முயற்சியும் தொடர்ந்து இருந்துவருமென்னில், இந்த அபிவிருத்தி ஏற்பாடுகள் நன்கு பராமரிக்கப்படுவதோடு, மேலும் பல அபிவிருத்திகள் செய்யப்படுமென்றும் நம்பப்படுகிறது.

மாயூரம் (மேற்கு) வட்டாரத்தில்

இவ்வட்டாரத்திலே, 1956, பிப்ரவரி மாதத்தில், ஆலங்குடி கிராமத்தில் மேலச்சேரியிலிருந்து கீழச்சேரிக்கு ரஸ்தா அமைக்கப்பட்டது. கருப்பூரில் ரஸ்தா ஒன்று செப்பனிடப் பட்டது. தலஞ்சேரியில் ஒரு ரஸ்தாவும், கேசிங்கம் கிராமத்தில் ஒரு ரஸ்தாவும் அமைக்கப்பட்டன. இரு முதியோர் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இரு சிறுவர் பூங்காக்கள் திறக்கப்பட்டன. 583 ரூபாய் பெறுமான கதர் உண்டியல்கள் விற்கப்பட்டதுடன், ரூ. 210-7-6 பெறுமான கதர் துணியும் விற்கப்பட்டது. 24 சர்க்காக்களும் விற்கப்பட்டன.

சில முக்கிய குறிப்புகள்

1955, டிசம்பர் வரை, கிராம மக்கள், சமுதாய அபிவிருத்தி வேலைகளுக்காக அளித்தது 85 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு உள்ளது.

கிராம மக்களுக்கு, சமுதாய நலத் திட்ட நிர்வாகம் மூலம், வினியோகிக்கப்பட்ட :

ரசாயன உரம் சுமார்...	2,249,000 மணங்கு
பொறுக்கு விதைகள் சுமார்	1,20,000 மணங்கு
இனத் தரமிகுந்த காளைகள் ...	460
இனத் தரமிகுந்த கோழிகள் ...	7,400

❖ ❖ ❖

பயிரிடுவதற்காக பண்படுத்தப்பட்ட நிலம் :

மொத்தம் சுமார் ..	28,000 ஏக்கர்
பாசனவசதி அளிக்கப்பட்ட நிலத்தின் மொத்த பரப்பு சுமார்	1,78,000 ஏக்கர்

❖ ❖ ❖

35 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டன.

❖ ❖ ❖

சுமார் 3,100 கிணறுகள் தோண்டப் பட்டன அல்லது புதுப்பிக்கப்பட்டன.

❖ ❖ ❖

ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகள் ..	780
ஆதார பள்ளிகளாக மாற்றப் பட்டவை	450
ஆரம்பிக்கப்பட்ட முதியோர் கல்வி நிலையங்கள்	1,750
அமைக்கப்பட்ட சமுதாய மன்றங்கள்	1,460
அமைக்கப்பட்ட மக்கள் மன்றங்கள்.	1,500

❖ ❖ ❖

மொத்தம் 490 மைல் நீளத்துக்கு கெட்டித்த ரஸ்தாக்களும், 1,680 மைல் நீளத்துக்கு சாதாரண ரஸ்தாக்களும் அமைக்கப்பட்டன.

(எப்ரல் மாத தொடர்ச்சி)

காட்சி 9.

இடம்.—சாந்தா நர்ஸிங் ஹோம்.

காலம்.—காலை நேரம்.

நடிகர்கள்.—ஹேமா, கந்தன், ராமு.

(நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருக்கும் ஹேமா ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறாள்—கந்தன் முன் புறத்தில் நின்றுகொண்டிருக்கிறான். ராமு போர்த்திக்கொண்டு முக்கி முனகிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து வருகிறான்.)

கந்தன்.—அடே ! ராமுவா ! என்னுப்பா உடம்புக்கு ?

ராமு.—ஒருவாரமா காய்ச்சல் தாங்கமுடியலே. டாக்டர் இருக்காங்களா அண்ணே ?

கந்தன்.—ஓ ! இருக்காங்களே !

(இருவரும் உள்ளே போகிறார்கள். ஹேமா எழுந்து ராமுவிடம் வருகிறாள்.)

ராமு.—டாக்டர் ! ஒருவாரமா ஜுரம். ஆகாரமே செல்ல மாட்டேங்குது. தலைவலி வேறே. எதர்க்கும் மருந்து கொடுங்க, டாக்டர் !

(ஹேமா ராமுவை பரிசோதித்துக்கொண்டே.)

ஹேமா.—எந்த ஊர் உனக்கு ?

கந்தன்.—இவனுக்குத்தானே ! இந்த மோகனத்தூர் தான்.

ஹேமா.—எப்படி வந்தே இவ்வளவு தூரம் ?

ராமு.—நடந்துதான் டாக்டர், வந்தேன்.

ஹேமா.—என்ன? நடந்து வந்தாயா? இந்த காச்சலோடா? ஏன் ? ஏதாவது வண்டி கிண்டி......

கந்தன்.—அதுகளுக்கெல்லாம் அவனெங்கேப்போவாங் கொளந்தே ?

ஹேமா.—ஏன் ?

கந்தன்.—அவன் ரொம்ப ஏழை, அவனுக்கு அப்பாவு மில்லே, அம்மாவுமில்லே, அவன் அப்பன் சொத்துகூட வச்சிட்டுப்போவலே. ஏதோ பத்தாவது வரையில் படிச்சுருக்கான். ஆனா வேலையுங் கிடைக்கிலே.

ஹேமா—ஐயோ பாவம் ! அரசாங்கம் எத்தனை பேருக்குத் தான் வேலை கொடுக்கும் !?

ராமு.—(இருமுகிறான்) ஐயோ ! (விலாவைப் பிடிச்சு) ஐயய்யோ ! அப்படியே தூக்குதே. வலி தாங்க முடியல்லயே. டாக்டர் ! டாக்டர் !!

(ஹேமா—ஒரு பொட்டலத்தை ராமு கையில் கொடுக்கிறாள்.)

ஹேமா.—இதில் இரண்டு மாத்திரைகள் இருக்கின்றன. இப்போ ஒன்றை சாப்பிட்டுவிடு. மாலை ஒன்றை சாப்பிட்டு விடு.

ராமு.—இதை எப்படி டாக்டர் சாப்பிடுவது ?

கந்தன்.—..........ம்..........இட்லியிலே தொட்டு திண்ணே: !

ஹேமா.—கந்தா ! இதுதான் பரிகாசம் பண்ணுகிற சமயமா ?

கந்தன்.—பின்னே பாருங்களேன்—இவ்வளவு படிச்சிருக்கிறவன் இந்த மாத்திரையை, எப்படி சாப்பிடுகிறதுன்னு கேக்கிறான் !

ஹேமா.—ராமு ! இதை பொடி பண்ணி வாயில் போட்டுக்கொண்டு வெந்நீரைக் குடித்துவிடு. நாளைக்காலையில் இதே நேரத்திற்கு வந்துவிடு. உடம்பு இருப்பதை பார்த்துக்கொண்டு ஊசி ஒன்று போடுகிறேன்.

ராமு.—ஊசியா !? வேண்டாம் டாக்டர் ! வேண்டாம் !!

ஹேமா.—ஊசி போட்டுக்கொள்ள ஏன் பயப்படுகிறாய் ?

" சாந்தா நர்சிங் ஹோம் "....ஹேமா....கந்தன்....ராமு....

ராமு.—ஊசி போட்டுக்கொள்ள பயப்படவில்லே டாக்டர். ஆனுல் கையில் காசு கிடையாது. அதற்காகத்தான் பயப் படுகிறேன் டாக்டர்.

ஹேமா.—காசு பணம் உன்னே யார் கேட்டா ?

ராமு.—பணம் வேண்டாமா டாக்டர் !

கந்தன்.—ஏழைகளிடம் காசு பணம் வாங்குவதில்லே நாங்கள்.

ராமு.—அப்படியா ! டாக்டர் ! வியாதி போனுலுஞ்சரி அல்லது ஆளே போனுலுஞ்சரி பணம் ! பணம் !! என்று பணத்து மேலேயே குறியாக இருக்கிற டாக்டர்கள் குவிஞ்சுக்கிடக்கிற இந்த நாட்டில் அதுவும் காசில்லாத வர்களே தூசிக்குச் சமமாக எண்ணும் டாக்டர்கள் நிறைந்து இருக்கின்ற இந்த நாளில் ஏழை எளியவர் களுக்கே வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருக் கின்ற உங்களே என்ன சொல்லி புகழ்வதென்றே தெரிய வில்லே டாக்டர் ! டாக்டர் ! உங்களே புகழ்பாட வளப்ப மிக்கத் தமிழ் மொழியிலேகூட தகுந்த வார்த்தைகள் இல்லே டாக்டர் ! டாக்டர் ! டாக்டர்......!

கந்தன்.—சரிதான் உன் வேலேய ஆரம்புச்சுட்டியே.

ராமு.—டாக்டர் உங்களேக் கண்டது, தெய்வத்தைக் கண்டது போலிருக்கு. எனக்கு சௌகரியமான பிறகு அருகிலேயே இருந்துகொண்டு உங்களுக்கு ஏதாவது உதவி செய்யனும்னு ஆசையா இருக்குது—வேலே தேடி விரைய மாக்கும் நேரத்திலே உங்கள் அருகில் இருந்துகொண்டு ஏழை மக்களுக்குத் தொண்டு செய்தாலாவது பிரயோஜனமுண்டு. இங்கே கம்பவுண்டர் வேலே கொடுத்தா ரொம்பவும் உண்மையாக ஒழுங்காக வேலே செய்கிறேன் டாக்டர். அது இல்லாட்டிப்போனுகூட நம்ப கந்தண்ணனேப் போல உங்கள் பின்னுடியே மருந்துப் பெட்டியையாவது தூக்கிக்கொண்டு வருகிறேன் டாக்டர்.

கந்தன்.—எலே ! எலே என்னடாது ! எந்தலேயிலேயே கையை வைச்சுட்டே.

ஹேமா.—ராமு அதெல்லாம் பிறகு பார்த்துக்கொள்ள லாம். இப்போ போய் மருந்தை சாப்பிட்டுவிட்டு நிம்மதியா தூங்கு. ஓய்வு வேண்டும் உனக்கு.

(திறை விழுகிறது.)

காட்சி 10.

இடம்.—நல்லிடைக்குறிச்சியில் நந்தவனம்.

காலம்.—காலே நேரம்.

நடிகர்கள்.—சேகர், மூர்த்தி, மோகன், வேலமுத்து. (பெஞ்சு ஒன்றிற்கருகில் சிகரெட் புகைத்துக் கொண்டு நின்று கொண்டிருக்கிருன் மூர்த்தி. வருத்தத்துடன் மெதுவாக உலாத்திக்கொண்டிருக்கிற சேகர், நின்று, பேசுகிருன்.)

சேகர்.—அன்று அத்தான் என்னை இழிவாகப் பேசும் போதெல்லாம் எப்படியிருந்தது தெரியுமா என் இதயம் ?

மூர்த்தி.—எனக்குத் தெரியாதா என்ன ? எனக்குக்கூட உள்ளூற பயந்தான். ஆத்திரம் மிகுதியால் எங்கே அத்தானிடமே சண்டைக்கு கிளம்பிடுவாயோன்னு என்று ......

சேகர்.—நல்லா இருக்கு ? நீ சொல்லியிருக்கும்போது அதை மீறி ஏதாவது செய்து விடுவேனு என்னு ? அதிருக்கட்டும் மூர்த்தி ! அத்தான் மனதை மாற்றியது போல் ஹேமாவின் மனதையும் மாற்ற வேண்டுமே !

மூர்த்தி.—கல்யாணம் பண்ணிக்கொள்ள முடியாதென்றே சொல்லிவிட்டாளா ?

சேகர்.—அப்படிச் சொல்லி இருந்தாலாவது சற்று நிம்மதி யடையலாமே.

மூர்த்தி.—பிறகு......?

சேகர்.—கல்யாணம் செய்துகொண்டு இல்வாழ்க்கை நடத்தத்தான் போகிறாளாம். ஆனால் இந்த சேகரை மணக்க மாட்டாளாம்.

மூர்த்தி.—மமதை கொண்டவள். படித்துவிட்டோம் என்கிற அகங்காரம் சேகர் ! அவள்....கண்டிப்பாகவே சொல்லிவிட்டாளா ?

சேகர்.—கண்டிப்பாக என்ன ? கத்தரித்தே பேசி விட்டாள். நீ அத்தானிடம் சொல்லிய காரணங்கள் அத்தனையும் அவரும் சொல்லி பார்த்துவிட்டார். ஆனால் ஹேமா இணங்க மறுத்து விட்டாள்.

மூர்த்தி.—அத்தான் இனியும் ஏதாவது முயன்று பார்ப்பாரா ? இல்லே இதோடு துப்பாக்கியை கீழே போட்டு விடுவாரா ?

சேகர்.—மூர்த்தி ! இனி அத்தானை நம்பி பிரயோஜனம் இல்லே. நேரடியாக ஹேமாவின் மனதைத்தான் கரைத்தாகவேண்டும்.

மூர்த்தி.—......ம்........! ஆம் ! உண்மைதான் ! இனி நேரிடை நடவடிக்கைத்தான் சேகர் ! பிட் நோட்டீஸ் சற்று முன்பு கொடுத்தாயே எங்கே அது ?

சேகர்.—பிட் நோட்டீசா ! கசக்கி எறிந்து விட்டேனே ! என் ? அது எதற்கு ?

மூர்த்தி.—" சுகாதார வாழ்க்கை " என்பது பற்றித்தானே பேசப் போகிறாள் ?

சேகர்.—ஆமாம் ! அப்படித்தான் அந்த நோட்டீசில் போட்டிருந்தது.

மூர்த்தி.—எந்த இடத்தில் மீட்டிங் நடக்கப்போவுது ?

சேகர்.—மோகனத்தூருக்கு அருகிலுள்ள திடலில்.

மூர்த்தி.—இரவு 8-மணி வரையிலாவது மீட்டிங் நடக்குமா? இல்லேயா ?

சேகர்.—8-மணியா ? அதோட முடிச்சுடுவாளா ஹேமா ? மணி 9-ம் ஆகலாம், 10-ம் ஆகலாம்.

மூர்த்தி.—மீட்டிங் முடிந்த பிறகு அங்கேயே தங்கிவிட்டு காலேயில்தான் வருவாளா ? அல்லது......?

சேகர்.—No ! No ! ஹேமா இரவு நேரங்களில் வெளியிடம் எங்கேயும் தங்கமாட்டாள். அதுதான் வில் வண்டி இருக்குதே ! எந்நேரமானாலும் வீட்டுக்குத் திரும்பிடுவாள்.

மூர்த்தி.—இரவு ஒன்பது பத்துமணிக்குமேல் வில் வண்டியில் ஹேமா வரப்போகிருள். மனித சஞ்சாரமற்ற இடத்தில் வரப்போகின்ருள். சபாஷ்! அப்போ நம்முடைய திட்டம் வெற்றிதான். அது சரி என்னேக்கு அந்த மீட்டிங் ?

சேகர்.—பதினைந்தாந் தேதி.

மூர்த்தி.—பதினைந்தாந்தேதி மீட்டிங் ! இன்னேக் தத் தேதி பத்து ! இன்னும் ஐந்து நாட்கள் இருக்கின்றன. We have got sufficient time. மயிலே மயிலே என்ருல் இறகு போடுமா ?

சேகர்.—மூர்த்தி என்னப்பா அந்த திட்டம் ?

(மூர்த்தி சற்று முற்றும் பார்த்துவிட்டு சேகர் அருகில் சென்று சொல்கிறன்.)

மூர்த்தி.—பதினைந்தாந்தேதி இரவு இரண்டு அடியாட்களோடு நாம் அந்த குறவன் குடிசை இருக்குபார். அதற்குப் பக்கத்திலே ஒளிந்து கொண்டிருக்கவேண்டும். வில் வண்டி வரும்போது..............

(மூர்த்தி சேகரின் காதில் ரகசியமாகச் சொல்லுகிறன். சேகரும் அவ்வப்போது தலேயை ஆட்டுகிறன்.)

மூர்த்தி.—எப்படி என் திட்டம் ?

சேகர்.—திட்டம் ரொம்ப ஜோர்தான். ஆனால் சூழ்நிலே ஒத்துக்கினுமே ?

மூர்த்தி.—அதென்னப்பா சூழ்நிலே ?

சேகர்.—அந்தக் குடிசையிலே குறவன் இருப்பான். அவனே ஹேமாவிடம் மரியாதையாக நடந்து கொள்பவன்.

மூர்த்தி.—ஒரு மாதத்திற்கு முன்பே குடிசையை காலி பண்ணிவிட்டு போய்விட்டானே. அந்தக் குறவன் வேறே ஏதாவது இடைஞ்சலுனு சொல்லு.

சேகர்.—ஹேமா வர்ற வண்டியிலே நம்ப ஊர் ஜனமோ அல்லது வேறு யாராவதோ இருந்தால் ?

மூர்த்தி.—சேகர் ! இதுகளுக்கெல்லாம் வழி வகுக்காமலா திட்டம் போடுவேன். நம் ஆட்களில் ஒருவன் நல்லிடைக் குறிச்சியிலும் இன்னொருவன் மீட்டிங் நடக்கிற இடத்திலும் இருப்பார்கள். வண்டி ஓட்டுகிறவன், ஹேமா இரண்டு பேரைத்தவிர வேறு யாரும் வராமல் பார்த்துக் கொள்வார்கள் அந்த ஆட்கள். வேறு சந்தேகம் ஏதாவது உண்டா ?

சேகா—அவ்வளவுதான் வேறு ஒண்ணுமில்லே.

மூர்த்தி.—எப்படித் திட்டம்.

சேகர்.—Excellent (எக்ஸலெண்ட்) ?

மூர்த்தி.—எங்கே, 50 ரூபாய் பணம் எடு !

சேகர்.—50 ரூபாயா ? எதுக்காக இப்போ ?

மூர்த்தி.—கணக்கு கேக்க ஆரம்பிச்சுட்டியே ! சரிதான் இனி நம்பத் திட்டமெல்லாம் குட்டிச்சுவறுதான். அடியாட்களுக்கு அட்வான்ஸ் கொடுக்கவேண்டாமா ? உளவு சொல்லப்போகிற ஆட்களுக்கு ஒண்ணோ ரெண்டோ கொடுக்கவேண்டாமா ?

சேகர். ....ம்..........

மூர்த்தி.—சரி சரி பணம் வேண்டாம். சந்தேகத்தோடும் சஞ்சலத்தோடும் எந்தக் காரியமும் செய்யக்கூடாது. செய்தாலும் வெற்றி கிட்டாது. திட்டமும் வேண்டாம். ஒண்ணும் வேண்டாம். (மூர்த்தி கோபமாகப் புறப்படுகிறான்.)

சேகர்.—மூர்த்தி ! 50 ரூபாய்தானே—இந்தா இதை வாங்கிக்கொள். (சேகர் அருகில் சென்று மூர்த்தியிடம் 50 ரூபாய் கொடுக்கிறான்.)

சேகர்.—என்னப்பா ! இப்படி கோவிச்சுக்கிறே. உன்மேலே யாரு சந்தேகப்பட்டா ? சரி ! இந்த தடவை காரியத்தை நிச்சயம் முடிச்சுடனும்.

மூர்த்தி.—O.K. (இருவரும் போகிறார்கள். அப்போது மோகனும், வேலமுத்துவும் நந்தவனத்திற்குள் நுழைகிறார்கள்.)

வேலமுத்து.—அதோ இடது பக்கத்திலே போறாரு பாருங்க அவருதாங்க நம்ம சச்சுதானந்தம் பிள்ளையினுடைய மைத்துனர்.

மோகன்.—மிராசு சச்சுதானந்தம் பிள்ளையுடைய மைத்துனரா ? இவருடைய பெயர் ?

வேலமுத்து.—சேகர்ன்னு பேரு. பக்கத்திலே போறாருலே அவர் சேகருடைய சிநேகிதர் மூர்த்தின்னு பேர்.

மோகன்.—அவர்களைப் பார்த்தா..............

வேலமுத்து.—ஆமங்க ! கொஞ்சம் "போ"வன்னு பேர் வழிதான்.

மோகன்.—அக்கப்போர் நமக்கெதுக்கு வேலமுத்து ! நீ சொன்னியே அது இந்த பூங்காதானா ?

வேலமுத்து.—ஆமங்க ! லோகல் டெவலப்மெண்டு ஒர்க்ஸ்லே நிர்மாணிக்கப்பட்டதுதாங்க இந்த பூங்கா !

மோகன்.—சச்சுதானந்தம்பிள்ளை இதற்கு ஏதாவது நன்கொடை............

வேலமுத்து.—அவரா ?......உ.....கு.....ம் ஒண்ணுங் கொடுக்கலே. நல்லக்கண்ணு முதலியாருண்ணு ஒருத்தர் முல்லையூரிலேயே இருக்காரு. அவருடைய நன்கொடை தானுங்க இது.

மோகன்.—ஒவ்வொரு ஊரிலேயும் இதுபோன்ற பூங்கா ஒன்றாவது அவசியம் இருக்கவேண்டும். நந்தவனங்கள் சாந்தி நிலையங்களாகவே திகழவேண்டும். சரி நேரமாகி விட்டது. சச்சுதானந்தம்பிள்ளை வீட்டிற்குப்போகலாமா ?

வேலமுத்து.—போகலாமுங்க. (திரை விழுகிறது.)

(தொடரும்)

அறிவிப்பு

"கிராம நலம்" பத்திரிகையின் விளம்பர விகிதம்

வெளி அட்டைப் பக்கம் ..	ரூ.	150– 0– 0
உள் அட்டைப் பக்கம் ..	ரூ.	125– 0– 0

இதர பக்கங்களில் :

பக்கம் ஒன்றுக்கு	ரூ.	100– 0– 0
அரைப் பக்கம்	ரூ.	60– 0– 0

சந்தா விவரம்

வருட சந்தா	ரூ.	1– 8– 0
ஆறு மாத சந்தா	ரூ.	0–12– 0

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பலாம்.

தனிப் பிரதி—இரண்டு அணு

தனிப் பிரதிகளை அனுப்ப, தபால் பில்லைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

மற்ற விவரங்களுக்கு, பின்வரும் விலாசத்துக்கு எழுதுங்கள் :

பொதுஜனத் தொடர்பு அதிகாரி,
(சமுதாய அபிவிருத்தி),
செக்ரடேரியட்,
சென்னை-9.

Public Relations Officer,
(Community Development),
Public (R.D.P.) Dept.,
Secretariat,
Madras-9.

இப் பத்திரிகை, சென்னை அரசாங்க, சமுதாய அபிவிருத்தி இலாகாவால் நடத்தப்படுகிறது. ஆயினும், இதில் வெளியிடப்படும் அபிப்பிராயங்களும், காணப்படும் கருத்துக்களும், சென்னை அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான அபிப்பிராயங்களை வெளியிடுகின்றன என்பதில்லை.

இப் பத்திரிகையில் வெளியிடும் பாட்டு, கதை, நாடகம் முதலியவற்றில் வரும் பெயர்கள் யாவையும் கற்பனையே. ஒருவரையும் குறிப்பிடுவன அல்ல.

இராட்டையால் கிட்டும் பலன்கள்

ஸ்ரீ எஸ். கே. பலவேந்திரன், கிராம சேவக் குள்ளஞ்சாவடி.

குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் உள்ள குள்ளஞ் சாவடி தொகுதி கிராமங்களில் கிருஷ்ணகுப்பம் கிராமமும் ஒன்று. சுமார் மூன்று மாதங்களுக்குமுன் நான் கிராம சேவக்காக இத் தொகுதிக்கு பணியாற்ற வந்தபோது, இராட்டை நூற்பு அதிக அளவில் பெருகாமல் இருந்ததைக் கண்டேன். குறிப்பாக கிருஷ்ணகுப்பம் கிராமத்தில் ஒரு இராட்டையும் இருக்கவில்லை. காரணம் நூற்புப் பற்றிய அக்கறையோ அல்லது இராட்டை நூற்பால் அடையும் அனுகூலத்தை தெரிந்தோ, தெரியாமலோ, கவனக் குறைவாய் இருந்ததுதான் என்று யூகிக்கிறேன். ஆகவே, நான் இதுபற்றித் தீவிரமான முயற்சியில் ஈடுபட்டேன். கிராமத்தார் பொதுக் கூட்டங்களிலும், தனிமையில் கிராமத்தாரைச் சந்திக்கிறபோதும் நூற்பைப்பற்றி வலியுறுத்தி வந்தேன். பிரசாரம் பலன் அளிக்கவில்லை. எனவே, பிரசாரத்தை நிறுத்தி செயலில் காட்ட தீர்மானித்தேன். ஒவ்வொரு நாளும் காலை ஆறு மணிக்கும், மாலை ஆறு மணிக்கும் அவ்வூருக்குச் சென்று என்னுடைய இராட்டையால் நூற்று வந்தேன். விசாலமான ஒரு மரத்தடியில் கிராமத்தார் (போகவும் வரவும்) நடமாடுகின்ற ஒரு பாதை ஓரமாகவும் என்னுடைய நூற்புக்கான இடத்தைத் தேர்ந்தெடுத்துக்கொண்டேன். ஆரம்பத்தில் சில சிறுவர், சிறுமியர்கள், மற்றும் சில கிராமவாசிகள் வட்டமிட்ட வண்ணம் சூழ்ந்து நின்றுக்கொண்டு வேடிக்கை பார்த்தார்கள். நாளடைவில் சில வாலிபர்களும் வயோதிகர்களும் வந்து பார்த்தார்கள். இடையிடையே கேள்விகள் எழுப்பி, பதில் உடனடியாகப் பெற்றுப் போயினர். நூற்க ஆரம்பிக்கப் போகிறேன் என்பதைத் தெரிவிக்கவும், சிறுவர், சிறுமியர், ஆகிய கிராமவாசிகளை ஒன்று சேர்க்கவும் நான் கையாண்ட முறை சுலபமானதுதான். அதாவது வாய்க் கின்னரம் (mouth organ) என்ற ஊது கருவியை ஊதுவேன். இக்கால 'சினிமா' பாட்டுகளின் மெட்டுகளை வாசித்தேன். கொஞ்ச நேரத்தில் சிறுவர், சிறுமியர் முதல் வாலிபர் வயோதிகர் வரை எல்லோரும் என்னைப் புடைசூழ நின்றார்கள். அந்த நேரத்தில் வாசிப்பதை நிறுத்தி, நூற்க ஆரம்பித்தேன். நூற்பதைத் தினமும் கண்ட சிறுவர்களில் சிலர் தாங்களாகவே முன்வந்து நூற்கக் கற்றுக் கொண்டார்கள். சிறுவர்கள் நூற்பதைக் கண்ட வாலிபர்களில் சிலர் (குறிப்பாக, பள்ளிக்கூட உபாத்தியாயர்களில் ஆறுபேர்) நூற்புக் கற்றுக் கொள்ள முன்வந்தார்கள். முயற்சியின் பலனாக இப்போது அவர்கள் ஆறு பேரும் நன்றாய் நூற்கக் கற்றுக் கொண்டார்கள். வாரம் ஒன்றுக்கு, சிட்டம் ஐந்து வீதம், தங்கள் ஓய்வு நேரங்களில் ஒவ்வொருவரும் நூற்கிறார்கள். நூற்ற நூலை, ஐந்து சிட்டம் வீதம் ஆறுபேர் முப்பது சிட்டம் தயாரிக்கிறார்கள். இம் முப்பது சிட்டங்களையும் வாரக் கடைசியில் ஒருவர் பெற்றுக் கொள்வார். இச் சிட்டங்களுக்குப் பதிலாக வேட்டி, சொக்காய் துணி அல்லது துண்டு, பட்டைப் பஞ்சு போன்றவற்றைப் பெற்றுக்கொள்கிறார். இவ்விதம் ஒவ்வொரு வாரமும் ஒருவர் பெற்றுக்கொள்கிறார். இவ்வறுவருக்குள் எனக்கு உனக்கு என்று போட்டி ஏற்படாமல் இருக்க, சீட்டுக் குலுக்கிப் போட்டுப் பார்த்து, உரியர் சிட்டங்களை அடையும் வழக்கம் அமுலில் கையாளப்பட்டு வருகிறது. ஆகவே நூற்புத்தொலாம் ஆரம்பமாகியுள்ள இராட்டை இயக்கத்தால், ஒற்றுமை இயக்கம், கூட்டுறவு இயக்கம், கதராடை உடுத்தல் இயக்கம், சுயதேவைப் பூர்த்தி இயக்கம், உழைப்புதான இயக்கம், பன்னோக்க மனப்பான்மை வளர்ப்பு இயக்கம், ஆகிய இன்னோரன்ன பல சீரிய பண்பாடுகள் அபிவிருத்தி அடைந்து வருகின்றன. இதோடு நான் பிரசாரம் செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் கிராம மக்களே பிரசாரம் செய்ய முன்வந்துள்ளது கண்கூடு.

எனவே, இத்தியாதி அனுகூலங்களைக் கேள்வியுற்ற ஏனைய கிராம மக்கள் நூற்புக் கற்றுககொள்ள முன்வந்துள்ளார்கள். வீட்டுக்கு மூன்று இராட்டை வீதம் நூறு வீடுகளுக்கு இப்போது முன்னூறு இராட்டைகள் தேவை. இராட்டை கைவசம் இல்லாதது இப்போதுள்ள பெருங்குறை. இக்குறையைச் சீக்கிரமே பூர்த்தி செய்துவிடுவேன் என்பது என் நம்பிக்கை மட்டுமல்ல, கடமையும் ஆகும். எனக்கு ஒரு மன திருப்தி, ஏன்? சந்தோஷமும் கூட. ஏனென்றால் கல்லூரிப் படிப்பில் பி.எஸ்ஸி. (B.Sc. Course) வகுப்பில் ஒரு கால் வெற்றி அடைந்திருந்தாலும் அவ்வளவு சந்தோஷப்பட்டு இருக்கமாட்டேன். காரணம் கல்லூரிப் படிப்பு வாழ்க்கையில் மக்கட்கு நேரடியாக சேவை செய்யத் தக்கதல்ல. நான் கிராமசேவக்காக பயின்ற காலத்தில் கற்றுக்கொண்ட நூற்பு, நடைமுறையில் மக்கட்கு சேவை செய்ய உதவியாக உள்ளது என்பதை நினைக்கும்போதும், ஒரே ஒரு இராட்டை இயக்கத்தால், நூற்பு கலை இயக்கம், கூட்டுறவு இயக்கம், ஒற்றுமை இயக்கம், சுயதேவைப் பூர்த்தி இயக்கம், உழைப்பு தான இயக்கம், கதராடை உடுத்தல் இயக்கம், ஆகிய இன்னும் பல இயக்கங்கள் நடைமுறையில் காண்பது யாருக்குத்தான் மகிழ்ச்சியைக் கொடுக்காது? அன்றியும் தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறிய கருத்துக்கள்—

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி தன்
மெய் வருந்தக் கூலி தரும்."

"முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை இன்மை
புகுத்தி விடும்."

"உள்ளம் உடைமை உடைமை; பொருளுடமை நில்லாது
நீங்கி விடும்."

"உண்மை! உண்மை!!" என்று இராட்டை நூற்பு இயக்கம் உறுதி கூறுகிறதல்லவா?

Printed by the Superintendent, Government Press, Madras, Edited by the Public Relations Officer and published by the Additional Development Commissioner, Government of Madras.